


# தினப்புயல்

news
THINAPPUYAL
තිනප්පූයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -339

# ஜெனீவா தீர்மானமும் ஈழத்தமிழரும்



## த.தே.கூட்டமைப்பை பல்வேறு கட்சிகளாக உடைப்பதே அரசின் திட்டம்



## இலங்கை : இனவாத யுத்தம் நிகழ்கால வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள விதம்



# ஜெனீவாத் தீர்மானமும் ஈழத் தமிழரும்

**ஜெனீவாத் தீர்மானத்தில் உள்ளது என்ன?**

**ஜெனீவாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோர் யார்? அதற்கான காரணிகள் எவை? ,**

**ஈழத்தமிழரின் தேவை, நோக்கம் என்ன?,**

**அதை எப்படி அடையலாம்? ,**

**அமெரிக்கத் தீர்மானத்தால் ஈழத்தமிழர்களுக்கு என்ன லாபம்?**

**தீர்மானத்தின் வெற்றிக்கு உழைத்தோர், தீர்மானத்தை ஆதரிப்போர் யார்?**

**தீர்மானத்தை எதிர்ப்போர்யார்யார் அவர்களின் தேவை நோக்கம் என்ன?.**

**அடுத்து என்ன நடக்கலாம்.தமிழரின் செயற்பாடுகள் எப்படி இருக்கவேண்டும்?**

## ஜெனீவாத் தீர்மானத்தில் உள்ளது என்ன?.

இலங்கையில் தனிமனித சுதந்திரம்.ஊடக சுதந்திரம்.பேச்சுச் சுதந்திரம். ஒன்று கூடும் சுதந்திரம் போன்றவை சரியாக இல்லை. மனிதஉரிமை மீறல்கள் மனிதத்திற்கெதிரான குற்றங்கள் போர்க்குற்றங்கள்நடைபெற்றுள்ளமைக்கான ஆதாரங்கள் உள்ளன. சிறுபான்மை இன மத மக்களுக்கெதிரான தாக்குதல்கள் நடந்துள்ளன. போரினால் பாதிக்கப்பட்டோருக்கான மீள் குடியேற்றம் அடிப்படை வசதிகள் தொழில் வாய்ப்பு போன்றவை நடைபெற்றிருந்தாலும் அது முழுமையான முறையில் இடம்பெறாததோடு ஆயுதப் படைகள் நிலங்களைப் பிடித்திருப்பதால் பல மக்கள் மீள்குடியேற முடியாமல் உள்ளது. சிவில் நிர்வாகத்தில் வலுவான ஆயுதப் படையினர் தலையீடு இருக்கின்றது. நீதிச்சேவையாளர்கள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர் போன்றோர் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. சுதந்திரமாக இயங்க வேண்டிய நீதிநிர்வாகம் தேர்தல்ஆணையம் போன்றவை சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்புகள் இல்லை.நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, ஜனநாயக ஆட்சி இலங்கையில் முறையாக நடைபெறவில்லை. எனவே சர்வதேச நியமங்களுக் கேற்ப இவற்றைச் சீர்செய்ய இலங்கை கடமைப்பட்டுள்ளது. அதைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தனது LLRC ன் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது உட்பட உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆனால் இதுவரை அதற்காகக் கொடுக்கப்பட்ட கால எல்லையுள் ஸ்ரீலங்கா அரசு கணிசமாக எதையும் செய்யாததோடு நிலைமைகள் அப்படியே தொடர்கின்றன.

ஆதலால் LLRC பரிந்துரைகளை அமுல்படுத்துவதோடு முறையான சுயாதீன விசாரணைகள் மூலம் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த வேண்டு மென்றும் முழுமையான 13ம் திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்கலோடு நல்லிணககத்தை ஏற்படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்து மாறும் சபை சிறிலங்காவைக் கேட்டுககொண்டிருக்கின்றது. அந்தச் செயற்பாட்டிற்கு மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இலங்கையின் ஒத்துழைப்போடு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மேற்பார்வை செய்வதோடு மனித உரிமை-ஆணையாளர் அலுவலகம் பொருத்தமான நிபுணர் கொண்ட ஒரு சர்வதேசப் பொறிமுறை மூலம் 2002 முதல் 2009 வரையான காலப் பகுதிக்கான ஒரு விசாரணையை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டு மென்றும் வேண்டப்பட்டுள்ளது. இதுதான் தீர்மானத்தின் சுருக்கம்.

## ஜெனீவாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோர் யார் அதற்கான காரணிகள் எவை?.

தீர்மானத்தை அமெரிக்கா பிரித்தானியா மொன்டிநீக்ரோ மசிடோனியா போன்ற நாடுகள் கூட்டாகக் கொண்டு வந்தார்கள். பெயரளவில் இந்த நாடுகள் கொண்டுவந்திருந்தாலும் அமெரிக்க அணியிலான நாடுகள் கொண்டு வந்தார்கள் என்பது தான் உண்மையான நிலை. இவர்கள் இந்தத் தீர்மானத்தை ஏன் கொண்டுவந்தார்கள்?.அதற்கான காரணத்தை அறிய வேண்டுமானால் நாங்கள் இந்த உலகத்தின் நடைமுறை களையும் அது அப்படி இயங்கு வதற்கான அடிப்படைத் தன்மைகளையும் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த உலகத்தில் எந்தவொரு தனி மனிதனானால் என்ன இனமானால் என்ன நாடு என்றால் என்ன முதலில் தத்தம் நலன்களைப் பற்றியே சிந்திப்பார்கள். சரி பிழை நீதி நேர்மை தர்மம் இவையெல்லாம் பின்னால் ஒளிந்திருப்பவையே தவிர தத்தம் நலன்களை விட்டுக்கொடுத்து நீதியை சரி பிழையை முதன்மைப் படுத்திப் பார்ப்பதில்லை. இந்த உண்மையின் அடிப்படையில் நாம் சிந்திக்காவிட்டால் நிட்சயம் நாம் சரியான முடிவுக்கு வர முடியாது. ஒவ்வொரு நாடும் தத்தம் அரசியல் நன்மை பொருளாதார நன்மை உலக ஆதிக்க நன்மை பிராந்திய நன்மை என்று இவற்றின் அடிப்படையிலேயே செயற் படுகின்றன. அமெரிக்காவும் சீனாவும் இன்றைய உலகின் வல்லரசுகளாகத் திகழ்கின்றன. அமேரிக்கா தனக்குப் பக்கபலமாக கனடா பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடு களையும் சீனா தனது பக்கத்தில் ரஷ்யா பாகிஸ்தான் கியூபா போன்ற நாடுகளையும் கொண்டுள்ளன. மற்ற உலக நாடுகள் எல்லாம் இந்த இரு கூட்டணியில் ஏதாவது ஒரு கூட்டணியில் தான் இருக்கின்றன. நடுநிலை யாகவும் சில நாடுகள் உள்ளன.ஒவ்வொரு அணியும் தத்தம் நலன்களின் அடிப்படையில் தான் செயற்படுகின்றன.

(இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக இருப்பதோடு அதற்குச் சவாலாக இருக்கும் சீனாவோடு பகையாக இருப்பினும் தன் பிராந்திய நலன் கருதி அமெரிக்கா வுடன் முழுமையான உறவு என்று கூறிவிட முடியாது. பிராந்திய வல்லரசான இந்தியாவைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர சீனா இந்தியாவைச் சுற்றிவர ஒரு முத்து மாலைத் திட்டத்தை உருவாக்கி உள்ளது. அதிலிருந்து விடுபட இந்தியா திணறுகிறது. தன் தெற்கு எல்லையில் உள்ள இலங்கை யாவது சீனாவில் இருந்து விடுபட்டு தனது அணியில் இருக்க வேண்டு மென்பதே அதனது குறிக்கோள்.

அமெரிக்காவின் உதவி அதற்குத் தேவை என்றபடியால் அமரிக்காவை இந்தியா எதிர்க்காது. ஆனால் இலங்கையை முழுமையாக எதிர்த்து அதை தன் வழிக்குக் கொண்டுவர முடியாதென்றும் அழுத்தங்களைப் பிரயோகித்து நட்பான வழியில்தான் அதை சாதிக்கலாம் என்பதே தற்போதைய இந்திய வெளியுறவுக் கொள்கையாகும்.இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் குறிப்பாக இலங்கையில் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்பும் அமெரிக்க அணிக்கு இந்தியா ஆதரவாக இருப்பினும் அமேரிக்கா இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்தைக் கட்டுபடுத்தக் கூடாதென்பதில் இந்தியா குறியாக உள்ளது).

உலக சக்தி வளம் அதாவது எரிபொருள் வளம் மத்தியகிழக்கு நாடுகளில் தான் அதிக அளவில் இருக்கிறது. அவை இந்து சமுத்திரத்தினூடாகவே பிற நாடுகளுக்குச் செல்கிறது. அத்துடன் இந்து சமுத்திரப் பிராந்தியக் கட்டுப்பாடு தான் உலகக் கட்டுப்பாட்டையே தீர்மானிப்பதாக உள்ளது. இப்போது இந்து சமுத்திரக் கட்டுப்பாடு குறிப்பாக இந்துசமுத்திரத்தின் மையத்தில் உள்ள இலங்கையின் கட்டுப்பாடு சீனாவிடம் சிக்கிவிட்டதால் இலங்கையை சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பது தான் அமெரிக்கத் தீர்மானத்தின் முதல் நோக்கம். அத்துடன் ஸ்ரீலங்காவில் உள்நாட்டுபிரச்சனை இருக்கும்வரை நல்லாட்சி இல்லாதவரை வெளிநாட்டுத் தலையீட்டைத் தவிர்க்க முடியாது என்பதால் அங்கே ஒரு நல்லாட்சியைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதும் அமெரிக்காவின் விருப்பம். ஆனால் உள்நோக்கத்தை வெளிப்படையாகத் தெரிவிக் காமல் இலங்கையில் சர்வதேச நியமங்களுக்கேற்ப நல்லாட்சியை ஏற்படுத்துவதர்காகத்தான் இதைக் கொண்டு வருவதாக வெளியில் சொல்லப் படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



## ஈழத்தமிழரின் தேவை நோக்கம் என்ன?. அதை எப்படி அடையலாம்?.

உலகில் வாழும் ஏனைய இன மக்களைப் போல எந்த விதமான இன மத அரசியல் பொருளாதார ஒடுக்குமுறைகளும் இல்லாமல் நாம் வாழும் நாட்டில் அனைத்து மக்களும் சமமான உரிமைகளோடு வாழ வேண்டுமென்பதுதான் ஈழத்தமிழரின் தேவை.நோக்கம். தனி நாடு எமது தேவை அல்ல. எமது தேவையை குறிக்கோளை அடைய இருக்கும் பல வழிமுறைகளில் தனிநாடு என்பதும் ஒரு வழி. அது மட்டும் தான் சரியான வழி என்பது தமிழர் தமது கடந்த கால அனுபவத்தால் எடுத்துள்ள முடிவு. இதை நாங்கள் மிக நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

சர்வதேசம் தமிழருக்கு என்ன தேவை என்றால் தனிநாடு என்று பதில் சொல்லக் கூடாது. "இன மத அரசியல் பொருளாதார ஒடுக்கு முறைகள் இல்லாமல் நாம் வாழும் நாட்டில் அனைத்து மக்களும் சமமான உரிமைகளோடு வாழ வேண்டுமென்பதுதான்எமதுதேவை" என்றே பதில்கூறவேண்டும். எமது இந்த நோக்கத்தை தேவையை எப்படி அடையலாம?. இது தான் எங்களுடைய மிகப் பெரும் கேள்வி.

இந்த உலகம் இயங்கும் தன்மையின் அடிப்படைகளை சற்று முன்னர் தெரிந்து கொண்டோம். அதனுடைய தற்போதைய நிலைமைகளையும் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டால் தான் எமது நோக்கத்தை அடையும் சரியான வழியை நாங்கள் காண முடியும். ஒவ்வொரு நாட்டினதும் தேவைகள் என்ன? நோக்கங்கள் என்ன அதற் கேற்ப அவை ஒவ்வொரு விடயத்திலும் எப்படியான முடிவை எடுக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். உலகமே தத்தம் நலன்களின் அடிப்படையிலே தான் அசைவதால் அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தரப்பகைவனும்இல்லைஎன்பதுமிகமிக பெரிய உண்மை. இந்தியாவை நம்பலாமா? அமெரிக்காவை நம்பலாமா என்ப தெல்லாம் அர்த்தமற்ற மிக முட்டள்த்தனமான கேள்வி. குறிப்பிட்ட விடயத்தில் குறிப்பிட்ட நாடு ஆதரவா அப்படியென்றால் அதில் மட்டும் அது எமது நண்பன் அடுத்த விடயத்தில் அது ஆதரவில்லையா அப்போது அது எமக்கு எதிரி. அவ்வளவுதான். நாம் வெற்றி பெற வேண்டுமானால் நாம் பலமடைய வேண்டும். எதிரி பலவீனப்பட வேண்டும். இதுதான் அடிப்படை. தீர்வு உடனடியாக நடந்து விடாது. மந்திர மாயா சாலத்தால் தனிநாடு கிடைக்காது. ஆனால் நாம் பலமடைவதும் எதிரி பலவீனமடைவதும் இரண்டுமே தொடருமானால் நிச்சயம் ஒருநாள் நாம் வெற்றி அடைவது உறுதிதானே. என்றோ ஒரு நாள் நமக்குக் கிடைக்கவேண்டிய ஒன்றுக்காக இன்று கிடைப்பதை வேண்டாம் என்பது முட்டாள்த்தனம். அது நாம் பலம் அடைவதற்கு அல்லது எதிரியைப் பலவீனப்படுத்துவதற்கு பயன்படுமானால் அதை கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிரியை இது முழுமையாக அழிக்காது சும்மா கொஞ்சம் பலவீனப்படுத்துவதால் பயன் இல்லை என்று அதைப் புறக்கணிப்பதும் வெற்றிக்கு வழி அல்ல. நாம் திடமாக உணர வேண்டியது வெற்றிஓரிரவில் கிடைப்பதல்ல. நாம் பலமடைந்து கொண்டும் எதிரி பலவீனப்பட்டுக்கொண்டும் போகும்போது இறுதியில் கிடைப்பதுதான்வெற்றி. இதுதான் எமது மிகச் சிறந்த போராட்ட செயற்பாட்டு வழி.

## அமெரிக்கத் தீர்மானத்தால் ஈழத்தமிழர்களுக்கு என்ன லாபம்?.

ஈழத்தமிழர் பிரச்சனை மிக மிக நுட்பமாக மிகக் காரசாரமாக அக்கு வேறு ஆணி வேறாக ஒரு சர்வதேச அரங்கில் அலசப்பட்டிருக்கிறது. தத்தம் ஆதாயங்களுக்காக சில நாடுகள் எதிர்த்தும் சில வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலும் இருந்தாலும் அனைத்து சர்வதேச நாடுகளுக்கும் குறிப்பாக ஊடகங்கள் வாயிலாகச் சர்வதேச மக்களுக்கும் எமது பிரச்சனை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இலங்கை சர்வதேசத்தில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தம் மிகக் கடுமையாக வந்துள்ளது. இலங்கை அரசு தீர்மானத்தை செயற்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. சர்வதேச விசாரணையாளரையும் நாட்டிற்குள் அனுமதிக்காமல் இருக்கலாம்.

ஆனாலும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அரசாங்கத்தின் மோசமான கெடுபிடிகள் குறையும். தான் நினைத்தபடி தமிழருக்கெதிரான மோசமான அடக்குமுறைகளைத் தொடர முடியாது. தமிழர் தமது போராட்டங்களைத தொடர சர்வதேச ஆதரவு இருக்கும். இவற்றிற்கு மேலாக ஸ்ரீலங்கா பிடிவாதமாக எதிர்த்தால் பல நாடுகள் பொருளாதாரத் தடையை ஏற்ப்படுத்தும் சாத்தியம் உண்டு. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தப் பிரச்சனை எடுக்கப்பட்டு ஒரு சர்வதேச பாதுகாப்புப் பொறி முறையை அல்லது சர்வதேச நீதிமன்ற விசாரணையை ஏற்படுத்த வாய்ப்பு அமை யலாம். இவற்றால் சிங்கள அரசிற்கான மக்கள் ஆதரவு குறையலாம். அதனால் இலங்கைக்கு நெருக்கடி அதிகரிக்கும். இலங்கை தொடர்ந்து அடம்பிடித்தால் அடுத்த வருடம் இன்னும் கடுமையான சர்வதேச செயற்பாடுகள் இடம்பெறும். உடனடியாக நாம் எதையும் பெற முடியாது.

12ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஜெனீவா தீர்மானம் தமிழ் மக்களுக்களின் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியா?

ஜெனீவாவில் நடந்து முடிந்த 46வது மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தொடர் இலங்கைக்கு ஒரு பின்னடைவையும் அதே நேரம் ஒரு எச்சரிக்கை சமிஞ்சையாகவும் அமைந்து விட்டது என்பது உண்மை. இம் மாநாடு தொடங்குவதற்கு முன்னர் எவ்வாறாயினும் இக் கூட்டத்தொடரில் இலங்கை பாரிய அழுத்தம் இன்றி தப்பிக்கும் நிலை காணப்பட்டது. சீனா.பாகிஷ்தான் கூட்டத்தொடர் ஆரம்பமான உடனேயே இலங்கைக்கு ஆதரவாக இருப்போம் என நேரடியாக அறிவித்த நிலையில் இந்தியாவின் ஆதரவு குறித்து தீர்க்கமான முடிவின்றி இறுதி வரை சென்றது.

இந் நிலையில் பிரித்தானியா.அமெரிக்கா உட்பட ஐ.நா மனித உரிமை பேரவை இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் விடயத்தில் இருந்த தளம்பல் நிலை. அசமந்த போக்கு அத்துடன் தொடர் மனித உரிமை மீறல்கள் என அனைத்து விடயங்களிலும் சற்று அதிருப்தியுற்ற நிலையில் இலங்கை அரசுக்கு எதிரான ஒரு இறுக்கமான தீர்மானத்தை கொண்டு வந்த நிலையில் அதற்கான வாக்கெடுப்பின் போது ஐ.நா பேரவைக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் 22வாக்குகளும் இலங்கைக்கு ஆதரவாக 11வாக்குகளும் கிடைத்தன இதன் மூலம் ஐ.நா வின் பிரேரனை நிறைவேற்றப்பட்டு அதற்குரிய செயற்பாடுகள் தொடங்கப்படவுள்ளது.

இந்த தீர்மானத்திற்கு இந்தியா மீண்டும் மதில் மேல் பூனை போல வாக்களிக்காமல் நடுநிலை வகித்தது. இந்த ஐ.நா மனித உரிமைபேரவையின் தீர்மானம் தமிழர்களுக்கான நீதியையும் அவர்கள் அழிவிற்கான தீர்வையும் பெற்று தருமா? என்பதே எமக்கு முன்னுள்ள பாரிய கேள்வியாகும்.உண்மையில் கடந்த காலக்கூட்டத்தொடரில் பொறுப்புக்கூறல் விடயங்களில் அரசிற்கு கால அவகாசங்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில் இம்முறையும் அவ்வாறான ஒரு நிலை தோன்றலாம் என தமிழ் மக்கள் சலிப்புற்று இருந்த நிலையில் பிரேரனை தமிழ் மக்களுக்கு ஓரளவு சாதகமாக அமைந்தததானது தமிழர்களுடைய இழப்புகளுக்கும் வலிகளுக்கும் கிடைத்த ஒரு சிறு ஆறுதல் மருந்தாகும். இந்த மருந்தை நாம் சரியாகவும் மிகவும் கவனமாகவும் தொடர்ந்து பாவிப்போமானால் ஏற்பட்ட ரணங்கள் ஆறுவதற்கு ஏதுவாக அமையும். இச் சிறு வெற்றிக்கு தமிழர்களின் தொடர் அகிம்ஷை வழிப்போராட்டங்கள் புலம்பெயர் மக்களின் தொடர் போராட்டங்களும் குறிப்பாக அம்பிகை செல்வகுமாரின் உண்ணாவிர போராட்டம் என்பன இதற்கு பக்க சார்பாக இருந்தமை வரவேற்க்க தக்கவிடயமாக அமைகின்றது. இச்சிறு வெற்றியை கண்டு புளாங்கிதம் அடையாமல் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒரு ஆரம்ப புள்ளியாக வைத்து தொடர்ந்தும் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வை பெற முயல்வதே எமக்கான நிரந்தர வெற்றியாக அமையும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**142**

2) எதிரிப்படைச் சிப்பாய் விறகு பொறுக்குவுதற்காகவும் ஆற்றில் குளிப்பதற்காகவும் குதிரைகளை தண்ணிக்காட்டவும் செல்கின்ற மக்கள் வாழ்விடத்தின் கரையோரப் பகுதிகள்3)இயற்கைத்தேவைகளை நிறை வேற்றுவதற்காக. எதிப்படைச்சிப்பாய்கள் செல்கின்ற எதிரியின் பாசறைகளிலுள்ள சமையற்கூடத்திற்கும் குதிரை லாயத்திற்கும் மலசலகூடத்திற்குமான பாதைகள் போன்றவகையிலான இடங்களாகும்.

தேடுதலுக்கு உகந்த நேரம் யாதெனில். காரிருள் சூழ்ந்த இரவாகும். தேடுதலுக்குப் போகும்போது. உனது ஆயுதத்தை சரிபார்த்துக்கொள். கையெறிக்குண்டுகளையும் குத்துவாள்களையும் எடுத்துக்கொள். பை அல்லது பொருட்பையை எடுத்துச் செல்லாதே. நிலவு தோன்றுகின்ற இரவானால். ஆயுதத்தின் மின்னுகின்ற பாகத்திற்கு வர்ணம் பூசுவது நல்லது, புகைபிடிக்கச் செய்வது அல்லது களிமண் பூசுவதும் நல்லது.

தேடுதலின் வெற்றி திகைப்பு நடவடிக்கையில் தங்கியிருக்கின்றது. வேவுக்காரர்கள் அல்லது தேடுதல் குழு யாருக்கும் தெரியாமல் எதிரியைநெருங்குகின்றதுடன்.வீரமான. எதிர்பாராத பாய்ச்சலுடன் தமது பணியை நிறைவேற்றுக்கின்றனர்.

எதிரிமீது பாயும்போது. சமரின்போது சத்தமிடுவது போலச்(எடுத்துக்காட்டாக சார்ஜ்) சத்தமிடாமல் பாய்ந்துக்கொள். சந்தடியின்றிச் செயற்ப்பட முயற்சிச்செய். கத்திவகை ஆயுதத்தை மாத்திரம் (குத்துவாள் அல்லது குத்தீட்டி) பயன்படுத்து. மிகவும் அவசியம் ஏற்படும் சமயத்தில் மாத்திரம் (குத்துவாள் அல்லது குத்தீட்டி) பயன்படுத்து. மிகவும்அவசியம்ஏற்படும்சமயத்தில் மாத்திரமே கையெறிகுண்டையும் சூட்டாயுதத்தையும் பயன்படுத்து. எதிரி கட்டங்களுக்குள் மறைந்திருத்தல், கூடிய எண்ணிக்கையில் காணப்படுதல் அல்லது தப்பியோட முயற்சித்தல் போன்ற சமயங்களிலாகும்.

தேடுதல் குழு செயற்படுகின்ற போது. ஒரு பிரிவு தோழர்கள் கைதிகளை பிடிக்கின்றார்கள், மற்றைய பிரிவு காவலணியாகச் செயற்ப்பட்டு, தமது தோழர்களுக்கு உத்தரவாதமளித்து. அவர்கள் கைதிகளுடன் பின்வாங்கிச் செல்லும்வரை காப்பளிக்கின்றனர்.

எதிரிக் கட்டளையகத்திற்குச் செய்தியைக் கொண்டுசெல்கின்ற அதிகாரியை அல்லது செய்தி பரிமாறுபவனைக் கைதியாக பிடிப்பதே மிகச் சிறந்ததாகும். எப்படி தோன்றினாயோ. அதைப்போலவே கைதிகளுடன் வேகமாய் சந்தடியின்றி மறைந்து போ.

### சுட்டுக்கொண்டிருக்கின்ற செச்னியா எஸ்.பேஇமனேத்சிக்கவ்

செச்சனிய இராணுவம் சுயமான படைப்பிரிவுகளாகவும் குழுக்களாகவும் மாற்ற மடைந்த பின், குறைந்த தீவிரத்தன்மை கொண்ட பிணக்காகச் சமர் மாறியது. இது சமர்களங்களில் இக்குழுக்களின் தரப்பில் கனரக சூட்டுக்கருவிகளைக் குறைந்தளவில் பயன்படுத்தும் நிலையை ஏற்படுத்தியது. இதனால் சூட்டுக் குருவிகளின் பங்கு கணசமானளவு உயர்ச்சியடைந்து.

வெவ்வேறு வகையான சூட்டாயுதக் கருவிகள் இருந்த பொழுதிலும் செச்சனியப் போராளிக்குழுக்களும் படைப்பிரிவுகளும் மிக நவீன வகை ரஷ்ய தயாரிப்பு ஆயுதங்களை கொண்டிருந்தனர். அவர்கள் 7.62மில்லிமீற்றர் தன்னியக்க சுடுகலன் ஏ.கே 47-ஏ.கே.எம் அல்லது 5.46மில்லிமீற்றர் தன்னியக்க சுடுகலன் ஏ.கே - ஏ.கே.எஸ் - 74 , 7.62மில்லிமீற்றர் டிரகுநோவ் பதுங்கி சுடு கலன் காலாஸ்நிக்கவின் இயந்திர சுடுகலன் ஆர்.பி.கே -63,ஆர்.பி.கே -74,7.62பி.கே.எம் அல்லது தாக்கியளிக்கப்பட்ட கவசவாகனங்களில் இருந்து கழறறியெடுக்கப்பட்ட இராங்கி இயந்திர சுடுகலன்கள் (பி.கே.ரி) ஆகியனவற்றை தமது படைக்கலன்களில் ஆயுதமாக கொண்டிருந்தனர். இவை தவிர சண்டைக்குழுக்கள் கூடியளவில் பல்வேறு வகையிலான கையில் வைத்து இயக்கும் இராங்கி எதிர்ப்பு எறிகணைகளையும் கொண்டிருந்ததுடன் விரிவான முறையில் 40மில்லிமீற்றர் குழல் விட்டமுடைய சுடுகலனில் பொறுத்துகின்ற எரிகணை செலுத்தியையும் (கே.பி.25) பயன்படுத்தினர்.

ஆயுத போராட்டத்தின் புதிய முறைகள் செச்சனியர்களை சமருக்கான புதிய தந்திரோபாயத்தை உருவாக்க நிர்பந்தித்தனர். அவர்களின் படைப்பிரிவுகளில் கனரக ஆயுதங்கள் இல்லாமை விதிமுறைப்படி போராளிகளின் செயற்பாடுகளை பதுங்கி தாக்குதலாகவும் குறுகிய சூட்டு தாக்குலுடனான வேகப் பின்வாங்களாகவும் நாசகார வேலை யாகவும் தாக்கி பிடிக்கிற சமரில் இருந்து பகுதிகளை கலை விடுதலாகவும் மட்டுப்படுத்தியது.

ஆகவே தான் அரச படைகளுடனான போராளிகளின் சூட்டுச் சந்திப்பு 300-500மீற்றர் தொலைவில் இருந்து நேர்ரெதிரே சுடுதலாக மாற்றம் கண்டது.இதுபோரின் ஆரம்பக்கால பகுதியில் நடந்தேறியது. இதன் காரணத்தாலேயே 5.45மில்லிமீற்றர் தன்னியக்க சுடுகலன் ஏ.கே-74 உடன் ஒப்பிடுகையில் கூடிய தாக்கியளிக்கும் தன்மை கொண்ட இரவையை கொண்டிருக்கின்ற காலாஷ்நிக்கவ் தன்னியக்க சுடு கலன் ஏ.கே 47 - ஏ.கே.என் பிரதான முக்கியதுவத்தை பெற்றது.

**தொடர்வான்...**
**நெற்றிப்பொறியன்**



# த.தே.கூட்டமைப்பை பல்வேறு கட்சிகளாக உடைப்பதே அரசின் திட்டம்



கடந்த பத்தாண்டு காலங்களுக்கு மேலாக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை எவ்வாறு உடைப்பது என்று அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி இற்றைக்கு ஓரளவு சாத்தியமாகிக்கொண்டு வருகின்றது என்றே கூறவேண்டும். காரணம் என்னவென்றால், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலுள்ளவர்கள் ஒரு தீர்மானத்தினை எடுக்கும் பொழுது கூட்டாக எடுப்பதில்லை. இதில் குறிப்பிட்ட ஒரு சிலர் மாத்திரமே அங்கம் வகித்துக்கொள்கின்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் இலங்கையரசு, பிரபாகரனையும் பிரித்த உத்வேகத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பையும் பிரித்து விடலாம் என்று சுலபமாக நினைத்து செயற்பட்டுவருகின்றது. இவ்விடயம் தமிழரசுக்கட்சிக்கு தெரியாதது அல்ல. விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நிலைப் பாடானது விடுதலைப்புலிகள் கூறுவதைச் செய்யும் வகையிலேயே அமைந்திருந்தது.

அதன்பின்னர் மேற்கத்தேய நாடுகளின் தலையீட்டின் காரணமாக இந்தியா தனது மூக்கை நுழைத்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை உள் வாங்கிக் கொண்டது. விடுதலைப் புலிகளினுடைய ஆலோசனையற்ற காலப்பகுதியில் இந்திய அரசானது இலங்கையரசின் ஊடாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை தனக் கேற்ற வகையில் பயன்படுத்திக்கொண்டது.

இந்தியா எமக்கு உதவி செய்யும் என சம்பந்தன் ஐயாவின் வாயால் கூறியபோதும், அதே வாயால் இந்தியா துரோகம் இழைத்துவிட்டது எனக்கூறினார். தற்பொழுது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை சுக்கு நூறாக்குவதில் இலங்கையுடன் இணைந்து இந்தியா செயற்படும் விதம் கசியத்தொடங்கியுள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகள் உட்பட ஏனைய இயக்கங்களையும் எவ்வாறு ஆரம்பகட்டத்தில் இந்தியாவின் ரோ உடைத்து அதில் வெற்றி கண்டதோ அதேபோன்றதான ஒரு பாணியில், தற்பொழுது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஆயுதக்குழுக்களை தமிழரசுக்கட்சியுடன் அணுகி அவர்களை சின்னாபின்னமாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

### இதற்கு தமிழரசுக்கட்சி உடந்தையா?

கட்சிக்குள் நடைபெறுகின்ற தீர்மானங்கள், கலந்துரையாடல்களைப் பார்க்கின்றபொழுது, அவ்வாறே என்று கூறப்படுகின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பே கடந்த வடமாகாணசபைத்தேர்தலின் பொழுது, மாகாணசபைத்தேர்தலுக்காக தத் தம் பிரதிநிதிகளை தெரிவு செய்து மாகாணசபைக்கு அனுப்பியது.

ஆனால் இன்று இந்த மாகாணசபையில் அங்கம் வகிப்போர் நாம் தமிழரசுக்கட்சியின் பால் வந்தவர்கள் என்று கருதுகின்றார்கள். மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைப் பொறுத்தவரையும் அரசுடன் நழுவிப் போகும் அரசியலையே தற்பொழுது செய்துவருகின்றார் எனலாம். இரா.சம்பந்தன் அவர்களைப் பொறுத்தவரையில், மக்களுக்குச் சொல்வது ஒன்று அரசிற்கு சொல்வது ஒன்று. மக்கள் தெரிவுசெய்து எம்மை பாராளுமன்றத்தில் அமர்த்தியிருக்கின்றார்கள் என்பதனை பதவியில் அமர்ந்து கொண்ட பின் மறந்துவிட்டார்கள். இவர்களை மாகாணசபைத்தேர்தல் களத்தில் நிறுத்திய கட்சியையும் மறந்துவிட்டார்கள். இப்பொழுது இவர்கள் கண்களுக்கு தெரிவது அவர்களுடைய பதவிதான் என்கின்ற நிலைக்கு வந்து விட்டார்கள். கூட்டாக இணைந்து ஒரு தீர்மானத்தினை எடுக்கும் காலத்தில் வெவ்வேறாக பிரிந்து தீர்மானங்களை எடுக்கின்றார்கள்.

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலின்போது, அரசின் ஆதரவுடனும் ஒரு சிலர் தமிழரசுக்கட்சியின் சார்பாக போட்டியிட்டனர். இவர்கள் அனைவரும் அரசுடன் ஆரம்பகட்டத்திலிருந்து நண்பர்களாகவும், கடந்த பல நாட்களில் தொடர்புகளையும் வைத்திருந்தவர்களாவர்.

1996ம் ஆண்டு வடகிழக்குப் பகுதியில் தீவிர யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, தமிழரசுக்கட்சியின் நிலையை எடுத்துக்கொண்டால், புலிகளின் இராஜதந்திரிகள் என்றே கூறப்பட்டனர். ஆனால் சம்பந்தன் அவர்களைப் பொறுத்தவரையில் அப்போதும் அவர் அரசிற்கு ஆதரவாகவே செயற்பட்டுவந்தார். குண்டுதுளைக்காத வாகனமும் அக்காலத்தில் சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது.

அப்போது சம்பந்தன் அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிரானவராகவே காணப்பட்டார். தற்பொழுது விடுதலைப்புலிகள் இல்லை தமிழரசுக்கட்சயில் உள்ளவர்களாகிய நாங்கள் சொல்லும் விடயத்தையே நீங்கள் கேட்கவேண்டும் என்கின்ற நிலைப்பாட்டிற்கு இலங்கையரசு இவர்களைத் தள்ளிவிட்டது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக்கூட்டணி தற்போதைய சிறிரெலோ, ஈழவர் ஜனநாயக முன்னணி என்று தமிழ் மக்களுக்கு குரல்கொடுக்கக்கூடிய பல கட்சிகள் இருக்கின்ற இந்நிலையில், அதிகமானவர்கள் அரசின் கைக்கூலிகளாகவே செயற்பட்டுவருகின்றனர்.

ஆரம்ப காலகட்டத்திலும் அரசின் கைக்கூலிகளாக செயற்பட்ட இயக்கக்கட்சிகள் தற்பொழுது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இணைந்துகொண்டிருப்பது ஆபத்தானது என்ற கூற்றை, இலங்கை - இந்திய அரசுகள் இரா.சம்பந்தனின் தலையில் வைத்துவிட்டது. இந்தியா கூறும் விடயங்களை செயற்படுத்தும் செல்லப்பிள்ளையாகவும் சம்பந்தன் அவர்கள் இயங்கிவருகின்றார்.

தமிழ்மக்களுக்கெதிரான அடக்கு முறைகளை இலங்கையரசு 1983 - 2000 வரையான காலப்பகுதியில் மேற்கொண்டபோது, அதனை தட்டிக்கேட்கவும், அரசிற்கு நெருக்கடிகளைக் கொடுக்கவும் ஒரு தலைவன் இருந்தார். அத்தலைவனின் வீரம் இன்று தான் மக்களுக்கு புரிகிறது. தற்போதைய காலகட்டத்தில் தமிழ்பேசும் மக்களாகிய முஸ்லிம்கள் மீதும் இலங்கையரசு பிரிவினைகளை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிவாசல்கள் உடைக்கும் பொழுதும், மதச்சுதந்திரத்தை சூறையாடும் பொழுதும், பாராளுமன்றத்தில் அமைச்சரவை அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மௌனிப்பது போன்றே, தற்பொழுது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் மௌனித்து வருகிறது. விடுதலைப்புலிகள் முள்ளிவாய்க்காலில் ஒடுக்கப்பட்டு உக்கிரப்போர் நடைபெற்ற காலகட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் தமிழ்மக்களுக்காக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாத அளவிற்கு இலங்கையரசினால் கடிவாளம் போடப்பட்டது. அது ஒரு காலம். ஆனால் இன்று அவ்வாறில்லை. தற்பொழுது சுதந்திரம் என்று கூறிக்கொள்கிறது அரசு.

இக்காலகட்டத்தில் தமிழரசுக்கட்சிக்குள் ஏன் பிரிவினைகள் ஏற்படவேண்டும். அதற்கான வழிவகைகளை ஏன் இவர்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அரசு எவற்றைக் கூறுகிறதோ அவற்றிற்கெல்லாம் வெறும் அறிக்கைகள் மட்டும் விடுத்துக்கொண்டு, செயற்பாடுகளை செயற்படுத்த முடியாமல் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இருக்கின்றது என்றால் அதனது அர்த்தம் என்ன?

செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன், ஸ்ரீதரன், மாவைசேனாதிராஜா, சரவணபவான், சுரேஸ் பிரேமச்சந்திரன், போன்றோர் காரசாரமான அறிக்கைகளை விடுவார்கள். அதன் பின்னர் கட்சித்தலைமைகளிடம் வினவுகின்றபொழுது, அது அவர்களின் தனிப்பட்ட கருத்து, அதனை அவர்களிடமே கேட்கவேண்டும் அல்லது யூகங்களுக்கு பதில் கூறமுடியாது என அக்கட்சியின் தலைவர் சம்பந்தன் கூறிவிடுவார்.

இதற்கான காரணங்கள் என்ன வென்றால், கட்சிகள் ஒருமித்து ஏகோபித்த முடிவு எடுப்பதில்லை. வடமாகாண சபைத் தேர்தல் முடிவுற்றதோடு மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனையும் அரசு திட்டமிட்டு அவர்களுடைய ஆதரவாளர்களை வேட்பாளர்களாக நிறுத்தியதன் காரணமாக அதில் வெற்றியும் கண்டது.

தற்பொழுதும் கூட தமிழரசுக்கட்சியில் உள்ளவர்கள் பலர், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் உள்ளவர்கள் பலர் இன்னும் அரசியலில் அரசுடன் பின்கதவு வைத்துச் செயற்படுகின்றார்கள். சம்பந்தன் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெறும் வரை தமிழ்மக்களுக்கான எந்தவொரு தீர்வும் கிடைக்கப்போவதில்லை. தமிழரசுக்கட்சியின் கருத்தின்படி, கூட்டமைப்பை பதிவுசெய்வதாயின் அனைத்து இயக்கக்கட்சிகளும் ஒரு பெயரின் கீழ் வரவேண்டும். அதன்படி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ என்றெல்லாம் இல்லை என்பதில் அவர் உறுதியாக இருக்கின்றார். இவ்வாறான திட்டத்திற்கு ஏனைய கட்சிகள் ஒரு போதும் உடன்படமாட்டார்கள். அவ்வாறு இணையமாட்டார்கள் என்பதும் இலங்கையரசிற்குத் தெரியும்.

இதனையே சாதகமாக வைத்து இலங்கையரசு கட்சிக்குள் பிரிவினைகளை உருவாக்கிதனது அரசியல் நடவடிக்கைகளை நகர்த்திச்செல்கின்றது. அண்மைக்காலமாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நடவடிக்கைகள் நாடுகடந்த தமிழீழ அமைப்பு உட்பட 16 அமைப்புக்களை தடைசெய்ததன் பின்னர் அவர்களுடைய செயற்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றது.

16 - 18 செப்டெம்பர் 2002 சதாஹிப் நாவலபேஸ், தாய்லாந்தில் வடக்கு கிழக்கில் மனிதநேயங்கள் தொடர்பான ஒரு சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பங்குபற்றியிருந்தது. ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் எவரும் பங்குபற்றவில்லை. இதேபோன்று 31 ஒக்டோபர் - 3 நவம்பர் 2002 வரை பாங்கொங் ரோஸ் கார்டன், தாய்லாந்தில் மனிதநேயம் தொடர்பாகவும் அரசியலி னுடைய நிலவரங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. 2-5 டிசம்பர் 2002 ஒஸ்லோ, நோர்வேயில் அரசியல் தொடர்பாக மாவட்டங்களை ஒன்றிணைப்பதற்கான பேச்சுக்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. 6-9 ஜனவரி 2002 ரோஸ் கார்டன், பாங்கொக்கில் மனிதநேயம் தொடர்பான செயற்பாடுகள் மாவட்ட ரீதியாக முன்மொழிந்துவைக்கப்பட்டது. 7-8 பெப்ரவரி 2003 பேர்லின், ஜேர்மனியில் மனிதநேயங்கள்தொடர்பாகவும், உறவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டது. 18-21 மார்ச் ஹக்கோன், ஜப்பானில் திகதிகள் தீர்மானிக்கப்பட்டபோதும் பேச்சுக்கள் நடத்தப்படவில்லை. 18 ஒகஸ்ட் பரிஸ், பிரான்ஸில் நாட்டின் ஒழுங்கு மற்றும் நிர்வாகங்கள் தொடர்பிலான பேச்சுக்கள் இடம்பெற்றது.

இந்த ஏழு பேச்சுகளில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பங்கு பெறவில்லை அதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கவுமில்லை. காரணம் அப்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விடுதலைப்புலிகளை மீறி எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபட முடியாதளவிற்கு இருந்தது. காலப்போக்கில் நிலை மைகள் மாறிவர, அக்காலகட்டத்தில் அரசிற்கு விசுவாசமாக செயற்பட்டுவந்த இரா. சம்பந்தன் அவர்கள், விடுதலைப்புலிகளின் யுத்தத்தினால் தீர்வு கிடைக்கப்போவதில்லை என நினைத்தாரோ என்னவோ? சந்தர்ப்பம் இதுதான் என அதிகாரத்தினை கையிலெடுத்துக்கொண்டு தற்பொழுது செயற்பட்டுவருகின்றார்.

இவர்களுடைய அரசியல் தந்திரம் இளமைப்பருவம் உடைய ஒருவர் மண்டைபழுத்துப்போகும் வரைக்கும் தமிழ்த்தேசியம், தன்மானம், தமிழ்த்தேசிய உணர்வு இப்படி பேசிப்பேசியே சென்ற வரலாறுகள் தான் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் எஞ்சியுள்ளது. அரசாங்கம் தம்மிடையே பல பிரிவுகளை உருவாக்குகிறது என தெரிந்து செயற்படுகிறார்களா? அல்லது இன்னும் அறியாதவர்களாக இருக்கின்றார்களா? என்பதும் மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இலங்கையரசினைப் பொறுத்த வரையில், ஜே.வி.பி, பொதுபலசேனா, ராவணபலய, ஐக்கியதேசியக்கட்சி போன்ற கட்சிகளாக இருந்தாலும் சரி நாடு என்ற வகையில் ஒரே கொள்கையில் உள்ளன. அதாவது பௌத்த நாடு, பௌத்தர்களுக்குரியது. இதனை நாம் சிறுபான்மையினருக்கு விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதில் குறியாக செயற்பட்டுவருகின்றனர். முஸ்லிம் சமுதாயத்தினரை எடுத்துக்கொண்டால் கூட தமது ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றனர். தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூட தமது நாட்டின் ஒற்றுமையைக் காட்டிநிற்கின்றது. அந்த வகையில் ஒற்றுமையை சீர்குலைக்க அரசு பேச்சுக்களை நடத்துகின்ற வேளையில் அதற்குநாம்தலையசைப்போமாகவிருந்தால், எம் தமிழ்மக்களின் தலையில் நாமே மண்ணை அள்ளிப்போடுவதற்கு ஒப்பான செயலாகும். வெளிநாட்டு உதவிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கே தடைசெய்யப்பட்ட இயக்கங்களுடன் தொடர்புகொள்ளக் கூடாது என்று வர்த்தமானி அறிவித்தல் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

11ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

# பிரபாகரனின் ஆயுதப் போராட்டம் ஜெனிவா வரை கொண்டு செல்லப்பட்டதன் காரணம் என்ன?

இலங்கையின் வடக்கில் உள்ள கடற்கரை நகரான வல்வெட்டித்துறையில் திருவேங்கடம் வேலுப்பிள்ளைக்கும், பார்வதிக்கும் கடைசி மகனாக பிரபாகரன், 1954 நவம்பர் 26ல் பிறந்தார். வேலுப்பிள்ளை இலங்கை அரசில் பணிபுரிந்தவர். பிரபாகரனுக்கு அண்ணனும், இரண்டு அக்காவும் இருக்கின்றனர். ஊரிக்காடு எனும் இடத்தில் சிதம்பரா கல்லூரியில் 10ம் வகுப்பு வரை பிரபாகரன் கல்வி கற்றார். 1958ம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய கலவரம், 4 வயது சிறுவனாக இருந்த பிரபாகரன் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது.

மாணவராக இருந்த போதே பிரபாகரன் தமிழ் ஆதரவாளர்கள் குழுவில் இருந்தார். தன் பள்ளித் தோழர்களுடன் சேர்ந்து கைக்குண்டுகளை தயாரிக்கப்பழகினார். ஒருமுறை குண்டு வெடித்து அவரது காலில் தழும்பை ஏற்படுத்தியது. ஒருமுறை அதிகாலை மூன்று மணிக்கு பிரபாகரனை தேடி பொலீஸார் அவரது வீட்டுக்கு வந்தனர். அப்போதுதான் தங்களது மகன் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறான் என்ற உண்மை பெற்றோருக்கு புரிந்தது. கதவு தட்டுவதை வைத்து பொலீஸார்தான் தன்னை தேடுகின்றனர் என்பதை உணர்ந்து கொண்ட பிரபாகரன் தப்பிவிட்டார்.

பிரபாகரனை தேடி சென்று கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தார் அவரது தந்தை. அப்போது தன் நிலைமையை அவரிடம் பிரபாகரன் கூறிய போது, 'உங்களுக்கோ, குடும்பத்துக்கோ நான் பயன்படமாட்டேன். என்னால் உங்களுக்கு எந்த தொல்லையும் வேண்டாம். என்போக்கில் விட்டுவிடுங் கள். என்னை எதிர்பார்க்காதீர்கள்' என்று கூறி வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அதன் பின் வீடு திரும்பவேயில்லை. கடந்த 1970களில் தமிழர்களுக்கு எதிராக ஏவிவிட்ட கடுமையான அணுகுமுறையும், கல்வித்துறையில் புறக்கணிப்பு உள்ளிட்டவை தமிழ் இளைஞர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புணர்வை உருவாக்கியிருந்தது.

பாராளுமன்றில் தமிழ்த்தலைவர்களின் போராட்டங்களுக்கு இலங்கை அரசு செவி சாய்க்கவில்லை. எனவே, தமிழ் பகுதியில் 1970ல் தமிழ் மாணவர் பேரவை துவங்கப்பட்டது. வல்வெட்டித்துறையை சேர்ந்த பிரபாகரனும், நண்பர்களும், உறவினர்களுமே அதில் முக்கிய பங்கு வகித்தனர். இக்குழு மாணவர்கள் மத்தியில் செல்வாக்கு பெறத் தொடங்கியது. அக்குழுவிலேயே மிக இளையவராக இருந்ததால் அவரை 'தம்பி' என்றே எல்லோரும் அழைத்தனர். சிங்கள எதிர்ப்பை காட்டும் விதமாக பஸ்சை எரிப்பது என்று முடிவு செய்தனர். அதன் படி 16 வயதாக இருந்த பிரபாகரன், பஸ்சை எரித்து தனது போராட்டத்தை துவக்கினார். மாணவர் பேரவையில் இருந்தவர்களை, சிங்கள பொலீஸார் கைது செய்து கொழும்பில் சித்திரவதை செய்தனர். இச்சூழ்நிலையில் பிரபாகரன் தமிழகம் வந்தார். பின் 1972ல் இலங்கை திரும்பிய அவர், 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை துவக்கினார். ஆயுதம் ஏந்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று அவர் தீர்மானமாக இருந்தார்.

கடந்த 1974ம் ஆண்டில் யாழ்ப்பாண நகரில் தமிழ் ஆதரவு மாநாடு நடந்தது. இம்மாநாட்டில் துப்பாக்கிச் சூடு நடந்ததில் ஒன்பது பேர் பலியாகினர். இச்சம்பவத்துக்கு பழி தீர்க்கும் விதமாக, 1975ல் பொன்னாலை எனும் இடத்தில் கோவிலுக்கு சென்று கொண்டிருந்த, யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொலை செய்யப்பட்டார். துரையப்பா, இலங்கை சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர், தமிழ் இன உணர்வை நசுக்கும் நோக்கத்தை கொண்டிருந்தவர். இச்சம்பவத்தை முன்னின்று நடத்தியவர் பிரபாகரன். இதுதான் பிரபாகரனின் முதல் கொலை நடவடிக்கை. கடந்த, 1975ல் புத்தூர் வங்கிக்குள் தனது தோழர்களுடன் நுழைந்து, ஐந்து இலட்ச ரூபாய் மற்றும், இரண்டு இலட்ச ரூபாய் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றார். இதனால் சிங்கள பொலீஸார் புதிய தமிழ்ப்புலிகளை அழிக்க தீவிரம் காட்டினர். கடந்த, 1976 மே 5ம் நாள் தமிழ் புதிய புலிகள் இயக்கத்தை தமிழ் ஈழ விடுதலைப்புலிகளாக, புதிய இயக்கமாக பிரபாகரன் நிறுவினார். இலங்கை உளவுப் படையினரை அழித்தல், பொலீஸ் நிர்வாகத்தை சீர்குலைத்தல், இராணுவத்தினர் மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்குதல் நடத்துதல் ஆகிய மூன்று அம்சங்களை புலிகளின் பணிகளாக அப்போது அறிவித்தார். கொரில்லா இயக்கமாக வெளிக் காட்டுவதற்காகவே, இயக்கத்தின் சின்னமாக புலியை தேர்வு செய்தார். புலிகள் இயக்கத்தை உருவாக்கியதால், இலங்கை இராணுவம் அவரை தேடத் தொடங்கியது. பொலீஸார் மீதும், இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர். 1978ல், 11 முக்கிய தாக்குதல் சம்பவங்களுக்கு தாங்கள்தான் பொறுப்பு என்று பிரபாகரன் அறிக்கை விட்டார். இதையடுத்து அந்த ஆண்டே விடுதலைப்புலிகள் தடை சட்டம் இலங்கை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

அதே ஆண்டில், ஐக்கிய தேசிய கட்சியின் ஜெயவர்த்தன அரசு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி, தமிழ் மொழியை இரண்டாம் பட்ச நிலைக்கு தள்ளியது. ஒருவரை எந்த விசாரணையும் இன்றி 18 மாதம் சிறையில் தள்ளும் சட்டத்தையும் 1979ல் இலங்கை அரசு நிறைவேற்றியது. இதனால், 1979-80ல் ஆயுத நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, இயக்கத்தை பலப்படுத்தும் வேலையில் பிரபாகரன் ஈடுபட்டார். 1981ல் சிங்கள இராணுவமும், ஐக்கிய தேசிய கட்சியினரும் இணைந்து யாழ்ப்பாண நூலகத்தை எரித்தனர். தெற்காசியாவில் சிறந்ததாக கருதப்பட்டது இந்த நூலகம். 94 ஆயிரம் புத்தகங்கள் சாம்பலாகின. கடந்த, 1981ல் யாழ்ப்பாண காங்கேசன் துறைமுகத்தில் இராணுவ வாகனத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதுவே இராணுவத்தினர் மீது புலியினர் நடத்திய முதல் தாக்குதல். 1982ல், அதிபர் ஜெயவர்த்தன தேர்தல் பிரசாரத்துக்கு வந்த போது, பொன்னாலைப் பகுதியில் கண்ணிவெடிகுண்டுகளை புதைத்து வைத்து தாக்குதல் நடத்தினர். கடந்த, 1983 உள்ளூராட்சி தேர்தலின் போது, நடத்திய தாக்குதல், இராணுவத்தினரை நிலை குலையச்செய்தது. கண்ணி வெடித்தாக்குதலில் 13 இராணுவத்தினரை கொன்றது ஆகிய சம்பவங்களை பிரபாகரன் நேரில் நடத்தினார். இதுபோன்று பிரபாகரனின் தீவிர செயல்கள் தொடங்கின. இதையடுத்து கண்ட இடத்தில் போராளிகளை சுடவும், சுட்டுத் தள்ளிய பின் பிணங்களை பிரேத பரிசோதனை இன்றி புதைக்கவும் வழிசெய்யும் ஆணையை சிங்கள அரசு பிறப்பித்தது.

அப்பாவி தமிழர்கள் மீதான தாக்குதல்களை சிங்கள இராணுவம் அதிகரித்தது. கருப்பு ஜுலை என்று அழைக்கப்படும், 1983 ஜுலை 23ல், சிங்களவர்களால் 400 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 1983 ஜுலை, தமிழ் ஈழப்போரின் கொந்தளிப்பான காலகட்டம் என்று சொல்லலாம். இராணுவத்தினர் மீதான கொரில்லா தாக்குதலை பிரபா கரன் தொடங்கினார். அரசியல் மற்றும் இராணுவ அமைப்புகளையும் விரிவாக்கம் செய்தனர். கருப்பு ஜுலை கலவரத்தை கணக்கில் கொண்டு, அப்போது பிரதமர் இந்திரா, இலங்கை பிரச்சினையில் தலையிடுவது என்று முடிவு செய்தார். இதற்கு அப்போது தமிழகத்தில் முதல்வராக இருந்த எம். ஜி.ஆர் முயற்சி செய்தார். புலிகளுக்கு இராணுவ பயிற்சியும் ஆயுதமும் வழங்குவது என்று இந்தியா முடிவு செய்தது. இந்நேரத்தில், தமிழீழத்துக்குத் தேவையான ஆயுதங்களையும் வெளியிலிருந்தும் பிரபாகரன் பெற்றார். இதனால், இராணுவத்தினர் மீது கடுமையான தாக்குதலை புலிகள் நடத்தினர். இந்நேரத்தில் இலங்கை அரசு கலக்கம் அடைந்திருந்தது.



தமிழ் ஈழ மக்கள் மகிழ்ச்சி அடைந்த நேரத்தில், 1984ம் ஆண்டில் இந்திரா படு கொலை செய்யப்பட்டார். அடுத்து பிரதமராகப் பதவியேற்ற ராஜிவுக்கும், பிரபாகரனுக்கும் இடையில் இணக்கமான சூழ்நிலை உருவாகவில்லை. இலங்கை அரசுக்குச் சாதகமாக ராஜிவ் செயற்படுவதாக பிரபாகரன் கருதினார். இதற்கிடையில், புங்குடுதீவைச் சேர்ந்த மதிவதனியை பிரபாகரன் 1984ம் ஆண்டு ஒக்.1ம் திகதி சென்னையை அடுத்த திருப்போரூர் முருகன் கோவிலில் திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதியினருக்கு இரு மகன்கள் சார்ல்ஸ் அன்ரனி, பாலச்சந்திரன் மற்றும் ஒரு மகள் துவாரகா பிறந்தனர். இவர்களில் சார்ல்ஸ் அன்ரனி தற்போது போர் முனையில் மரணமடைந்துவிட்டார்.

கடந்த, 1985ம் ஆண்டில் இருதரப்பினருக்கும் போர்நிறுத்தம் ஏற்பட்டது. பூட்டான் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் முயற்சியில் தமிழ்க் குழுக்கள் மாநாடு நடந்தது. இங்கு புலிகள் முன்மொழிந்த தமிழர் தன்னாட்சி உரிமை தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்கவில்லை. பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. இதன்பின், திருகோணமலை அருகே, இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி, 200 பேரைக் கொன்றது. இந்தியாவிலிருந்து அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் வெளியேறினார். இதையடுத்து, இந்தியாவுக்கும், பிரபாகரனுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. கடந்த, 1986ம் ஆண்டில் தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்கள் பறிக்கப்பட்டன. அப்போது பிரபாகரன் தமிழகத்தில் தான் இருந்தார். பிரபாகரனின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து அவை திருப்பியளிக்கப்பட்டன. 1987ம் ஆண்டில் அவர் ஈழம் திரும்பினார். அப்போது பேசிய அவர், 'தனி அரசை அமைக்க உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்' என்றார். கடந்த, 1987ம் ஆண்டில் டில்லியில் ராஜிவைச் சந்திக்கும் வழியில், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரையும் பிரபாகரன் சந்தித்தார். ராஜிவ் - ஜெயவர்தனா ஒப்பந்தம் பற்றி அப்போது அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இது தனக்கு அதிர்ச்சி அளித்ததாக பிரபாகரன் கூறினார். மற்ற தமிழ்க்குழுக்கள் ஏற்றுக் கொண்டன என்று கூறி, அப்போது ராஜிவ்-ஜெயவர்தனா ஒப்பந்தம் நிறை வேறியது. இந்த ஒப்பந்தப்படி, ஆயுதங்களை புலிகள் இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும். இலங்கை அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும். இந்திய அமைதிப் படை இரு தரப்புக்கும் இடையில் மோதல் நடக்காமல் கன்காணிக்கும். இதுபற்றி பேசிய பிரபாகரன், 'மக்களது விடுதலைக்காக, விமோசனத்துக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதிலிருந்து, தமிழ் ஈழ மக்களின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்கிறது.

நாங்கள் ஆயுதங்களை அளிக்காவிட்டால் இந்திய இராணுவத்துடன் மோதும் நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. தமிழ் ஈழ தனி அரசே நிரந்தரத் தீர்வைத் தரும்' என்றார். பலாலி இராணுவ முகாமில் இந்திய இராணுவத்திடம் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன. இந்திய இலங்கை ஒப்பந்தத்திலிருந்த விஷயங்களை இலங்கை அரசு நிறைவேற்றக் கோரி திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய கொள்கை உறுதியால் உண்ணாவிரதத்திலேயே மரணமும் அடைந்தார்.

திலீபன் மரணத்துக்குப் பின், விடுதலைப்புலிகளை இலங்கைக் கடற்படை கைது செய்தது. 'இது ஒப்பந்த விதிகளுக்கு முரணானது' என்று கூறிய ஏழு புலிகள் சயனைடு குப்பிகளைச் சாப்பிட்டு மரணம் அடைந்தனர். புலிகளும் போர் நிறுத்தத்தைக் கைவிட்டனர். இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் புலிகள் போராடுவது குறித்து, தமிழக முதல்வர் எம். ஜி.ஆருக்கு எழுதிய கடிதத்தில், 'இந்திய ராணுவம் புலிகளை ஒழிக்க வேண்டும் என்று நினைப்பதால் தான் எங்களது தற்காப்புக்காகப் போராடி வருகிறோம்' என்று பிரபாகரன் எழுதியிருந்தார்.

1987 மற்றும் 1988ம் ஆண்டுகளில், இடைக்காலஅரசைதமிழ்ப்பகுதியில்ஏற்படுத்த வேண்டும் என்று ராஜிவுக்கு எழுதினார் பிரபாகரன். இந்த சமயத்தில் பெண்களையும் போராளிகளாக பிரபாகரன் அனுமதித்தார். பெண்புலிகளும் போர்க்களத்தில் ஈடுபட்டனர். தமிழ் ஈழத்துக்காகப் போரிட்டு உயிர் நீத்த மாவீரர்ளை நினைவு கூறும் தினம் 1989ம் ஆண்டில் பிரபாகரனால் துவக்கப்பட்டது. இந்த சமயத்தில் அதிபராகப் பதவியேற்ற பிரேமதாசா புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்தார். இதனால், 1990ம் ஆண்டில் இந்திய அமைதிப்படை நாடு திரும்பியது. தமிழர்களுக்கு எதிராக இந்திய ராணுவம் நடந்து கொண்டது எனக் கூறி, அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி, ராணுவத்தினரை வரவேற்க விமான நிலையம் செல்லவில்லை. அதிபர் பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாததால், 1990 ஜனவரி 10ல் மீண்டும் இலங்கை ராணுவம் மற்றும் புலிகளிடம் மோதல் ஏற்பட்டது.

குற்றச்சாட்டுகள்: கடந்த, 1991 மே 21ல், ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரசாரத்துக்கு வந்த காங்கிரஸ் தலைவர் ராஜிவ், புலிகளின் மனித குண்டுக்கு பலியானார். இதில் பிரபாகரன் குற்றம் சாட்டப்பட்டார். ராஜிவ் -ஜெயவர்தனே மற்றும் அமைதிப்படை விவகாரங்களில் பிரபாகரன் அதிருப்தி அடைந்தது அதற்கு காரணமாக சொல்லப் பட்டது. 2006ல் ராஜிவ் படுகொலை பற்றி பிரபாகரன் கூறிய போது, ராஜிவ் கொலையை, 'ஒரு துன்பியல் சம்பவம்' என்றார். தமிழ் ஈழ விடுதலை அமைப்பு தலைவர் உமா மகேஸ்வரன், டெலோ தலைவர் சிறிசபாரத்தினம் படுகொலைகளிலும், 1990ல் சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எப்., தலைவர் பத்மநாபா மற்றும் அவரது சகாக்கள் 14 பேரை சுட்டுக் கொன்றது தொடர்பாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

நெற்றி பொறியன்
11ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கை : இனவாத யுத்தம் நிகழ்கால வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள விதம்

ஒரு யுத்தத்திற்கான காரணங்களை யுத்த தீச்சுவாலையை மூழச்செய்த உடனடி காரணிகளைக் கொண்டு விளக்க முயல்வது எப்போதும் தவறான முடிவுக்கே இட்டுச் செல்லும். பரந்த அளவிலான மக்களை பற்றிப் பிடித்த விதத்தில், யுத்த தீச்சுவாலைகள் வெடிப்பது நீண்ட காலமாக பொறிபறந்து வளர்ச்சி கண்டுவரும் தீப்பிளம்பு பற்றி எரியும் போதேயாகும். சகல தீப்பிளம்புகளும் எங்கும் எப்போதும் ஒரே பணியை ஆற்றுவதில்லை. சில தணிந்து போகலாம் அல்லது தணிக்கப்பட்டுவிடலாம். ஆனால், அவற்றின் சூட்டிலும் உத்வேகம் பெறும் வெவ்வேறு தீப்பொறிகள் யுத்தப் பிளம்புகளை தோற்றுவிப்பதில் வெற்றிகாணும். தொகை பண்பாக மாறுகின்றது என்ற இயக்கவியல் விதி இங்கு செல்லுபடியாகின்றது தமிழர் விரோத இனவாத யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் பொலிஸ் பரிசோதகர் பஸ்தியாம்பிள்ளை உட்பட 1983ல் 13 பேர் வடக்கில் கொலை செய்யப்பட்டதால் ஆரம்பமானதாக சிங்கள இனவாதிகள் கூறிக்கொள்கிறார்கள். தாராளவாத முகமூடி போட்டுக் கொண்டுள்ள முதலாளித்துவக் கையாட்கள் இனவாத யுத்தம் 1983 கறுப்பு ஜீலையின் பெறுபேறு என்கின்றனர்.

வரலாற்றாசிரியர்களாக வேஷம் போடுவோரும் இனவாத யுத்தத்திற்கு இரு விதமான காரணங்களை காட்டுகின்றனர். சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த அதில் ஒரு சாரார் யுத்தத்திற்கான காரணங்களை பிரித்தானிய ஆட்சிக்காலம் வரை நீடிக்கின்றனர். இதில் பலர் இனவாத விதி முறைகளை நடைமுறைக்கிடுகையில் இந்நாட்டு பிற்போக்கு சிங்கள-தமிழ் முதலாளித்துவத்தின் பொறுப்பை பூசி மெழுக முயற்சிக்கின்றனர். இங்கு ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து பிரிவினைக்கு முதலில் நடவடிக்கை எடுத்தது தமிழ் தேசிய இனத்தின் முதலாளிகளா? அல்லது சிங்கள தேசிய இனத்தின் முதலாளிகளா? என்பதை தேடுவது, முதலில் தோன்றியது முட்டையா? அல்லது கோழியா? என்பதை தேடுவது போன்றதாகும். ஏகாதிபத்திய அவசியங்களின்படி, பிரிவினையைஎதிர்பார்த்தசிங்களமற்றும்தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் முதலாளிகள் அனுமதி கிடைத்த இடத்திலேயே அதைப் பற்றிக்கொண்டனர். பிரித்தானியர்களின் 'பிரித்தாளும்' விதிமுறை, சிங்கள-தமிழ் முதலாளிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் நடைமுறைக்கிடப்பட்ட ஒன்றல்ல. ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் இடையே இங்கு நிலவிய இருதரப்பு ஒத்துழைப்புக்குமான காரணம், அவர்களிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகளை காட்டிலும் அவர்கள் இரு சாராரும் இந்நாட்டு சிங்கள தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தின் மூலம் எழுச்சி பெறும் சவாலைப் பற்றி பீதியும் எதிர்ப்பும் அடைந்ததேயாகும். அது வர்க்க உறவு மற்றும் வர்க்க ஆட்சி பற்றிய விடயமாகும். இரண்டாம் பிரிவைச் சேர்ந்த 'வரலாற்றாசிரியர்கள்' 1948ன் பின்னைய யூ.என்.பி - ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கங்களின் இனவாதக் கொள்கையை யுத்தத்திற்கான காரணங்களாக காட்டுகின்றார்கள். இந்தப் பிரிவில் பெரும்பான்மையாக அடங்குவோர் இடதுசாரி வேஷம் போட்டுக் கொண்டுள்ள குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் ஆவர்.

1948ம்ஆண்டின் சுதந்திரம்எனப்படுவது,தேசிய சுதந்திரத்துக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் எதிராக ஏகாதிபத்தியவாதிகளும் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களும் முன்னெடுத்த சதியின் பெறுபேறு என்பதில் சர்ச்சைக்கு இடமில்லை. 1949ன் பிரஜா உரிமைச் சட்டம் போலவே 1956ன் சிங்களத்தை மட்டும் அரச மொழியாக்கிய சட்டமும் சிங்கள முதலாளித்துவ ஆட்சியின் கீழ் நடைமுறைக்கிடப்பட்ட இனவாத பாகுபாடுகளுக்கு நல்ல உதாரணங்கள் ஆகும். ஆனால், 1948ன் சுதந்திரம் எனப்படுவதைப் போலவே 1956ன் பிற்போக்கு மசோதாவுக்கும் எதிராக நின்ற முதலாளித்துவ காட்டுமிராண்டி விதிமுறையைத் தோற்கடிக்கும் வல்லமை வாய்ந்த ஒரு அரசியல் சக்தி இருக்கவில்லையா? உண்மையிலேயே இருந்தது. இடதுசாரி வேஷம் போடும் தீவிரவாதிகள் அவ்வாறில்லை எனக் கூறுவது அவர்கள் பேணிக்கொள்ள முயலும் பழைய இடதுசாரி அரசியல் அமைப்புக்களின் காட்டிக்கொடுப்புக்கும் துரோகத்திற்கும் முந்தைய வரலாற்றுக்கே காலால் எட்டி உதைப்பதாகும். இந்தச் சம்மந்தப்பட்ட காலப்பகுதியில் சிறப்பாக போல்ஷிவிக்-லெனினிஸ்ட் சமசமாஜ கட்சி, 1950க்கு முன்னர், யூ.என்.பி.க்கும் சமரசவாத தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கும் எதிராக இன பேதங்களுக்கு அப்பால் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுகின்றதும் வழிநாடாத்துகின்றதுமான முக்கிய அரசியல் சக்தியாக விளங்கியது. 1953 ஹர்த்தால் போராட்டம் காட்டியதை போல், அந்த ட்ரொட்ஸ்கிச இயக்கம் முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசும் வல்லமை கொண்டிருந்தது. இந்த அரசியல் இயக்கத்தின் பிற்காலத் துரோக நடவடிக்கைகளுக்கும் இனவாத யுத்தத்துக்கும் இடையே நிலவும் உறவைக் கவனத்தில் கொள்ளாமல், முதலாளித்துவ அரசாங்கங்களின் இனவாத விதிமுறைகளைக் குற்றம் சாட்டுவதானது புறநிலை ரீதியாக முதலாளி வர்க்கம் சம்பந்தமாக பரிந்துரைக்கும் விதிமுறைகள் மூலம் வரலாற்றை விளக்குவதாகும். அது திரிப்பே அன்றி வரலாறு அல்ல.

### 1960-70களில் அரசியல் கட்சி நடவடிக்கை

அரசியல் கட்சிகளின் பணி, புறநிலை அபிவிருத்திகளினுள் அகநிலை காரணிகளாக செயற்படும் வர்க்க ரீதியான அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் திட்டவட்டமான பணிகளை இட்டு நிரப்புகின்றன. அந்தப் பணியை நோக்காது வரலாறு சப்பந்தமாக நிஜ புரிந்துணர்வைப் பெறமுடியாது. வரலாறு சம்மந்தமான அத்தகைய விளக்கங்கள் புறநிலை வாதத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். 1964 சமாசமாஜ-ஸ்டாலினிசக் கட்சிகளின் காட்டிக்கொடுப்பு இல்லாது இருந்திருக்குமானால், 1948 ஏகாதிபத்திய சார்பு சதிக்கும் 1956 சி.ல.சு.க. இனவாதஅரசியலுக்கும்முற்றுப்புள்ளிவைத்து, பிற்காத்தில் மூண்ட இனவாத யுத்தத்தை தவிர்க்க இடம் இருக்கவில்லையா? அவ்வாறு இல்லை எனக் கூறுவது முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்துக்கு பதிலீடு இல்லை எனவும் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசி, மனித இனத்தின் அமைதியான வாழ்க்கைக்கு வழியமைக்க இப்புவியில் இடமில்லை எனவும் கூறுவதற்கு சமமானதாகும்.

சி.ல.சு.க. அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு சமசமாஜக் கட்சி 1964ல் இழைத்த மாபெரும் காட்டிக்கொடுப்பினால் முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக சோசலிச மாற்றீட்டுக்கு இந்நாட்டின் சிங்கள தமிழ் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களுக்கு இருந்து வந்த சோசலிச பதிலீட்டு தீர்வுக்கான வாய்ப்புக்கள் இழுத்து மூடப்பட்டது. அது மட்டுமன்றி 1970-75 முதலாளித்துவ கூட்டரசாங்க காலத்தில் அத்தகைய ஒரு முற்போக்கு பதிலீட்டுக்காக சிங்கள-தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டுவந்த முயற்சிகளை முதலாளித்துவ அரச பலத்தைக் கொண்டு இரத்தத்தில் மூழ்கடிக்கும் பொல்லாக முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தின் பங்காளி என்றவிதத்தில் சமசமாஜமற்றும் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகள் மாறின. இது 1970க்கு முன்னர் அகநிலைவாதிகளால் கண்டு கொள்ள முடியாது போன 1964ன் மாபெரும் காட்டிக்கொடுப்பின் அழிவுகரமான நடைமுறைப் பாத்திரத்தை வெளிக்காட்டியது. எனவேதான் நாம் இனவாத யுத்தத்தின் வேர் அந்தக் காலப்பகுதியை நோக்கி வேரூன்றியுள்ளது எனச் சுட்டிக்காட்டுகின்றோம். 1970-1977 காலத்தில் இருந்து வந்த முதலாளித்துவ கூட்டரசாங்கம் மூலம், சிறப்பாக 1972 தொடக்கம் அத்திவாரம் இடப்பட்டு யூ.என்.பி.யினால் அப்பட்டமான யுத்த மட்டத்துக்கு கட்டி எழுப்பப்பட்ட தமிழர் விரோத இனவாத யுத்தம், இன்று இரண்டாவது



பொதுஜன முன்னணி கூட்டரசாங்கத்தின் கீழ் முன்னொருபோதும் இல்லாத காட்டுமிராண்டித் தனத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது. அன்று சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இருந்த கூட்டரசாங்கத்துக்கு தோள்கொடுத்த சமசமாஜ-ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், யூ.என்.பி.க்கு வழியமைத்துக் கொடுத்து மட்டுமன்றி, பின்னர் யூ.என்.பி. அரசாங்கம் முன்னெடுத்துச் சென்ற இனவாத யுத்தத்திற்கும் ஆதரவளித்தனர் என்பதை அறியாதோர் கிடையாது. 1987ல் இந்திய இராணுவத்தை தருவித்து, தமிழ்ப் பொதுமக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க யூ.என்.பி அரசாங்கம் எடுத்த தீர்மானத்தினை அங்கிகரித்தது வரையும் அவர்கள் இரத்தவெறி ஆர்வத்துடன் யூ.என்.பி. யின் இனவாத யுத்தத்தின் வக்கீல்களாகினர்.

தமிழ்ப் பொது மக்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கியும் அங்கிருந்து வவுனியாவின் சித்திரவதை முகாம்களுக்கும் குடும்பத்தோடு கலைத்த இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு, சமசமாஜ-ஸ்டாலினிச கட்சிகள் மட்டுமல்லாது ஏனைய சகல குட்டி முதலாளித்துவ கட்சிகளும், தீவிரவாதக் குழுக்களும் தோள் கொடுத்தன என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. நவசமசமாஜ கட்சி, மலையக மக்கள் முன்னணி, ஜே.வி.பி, மற்றும் ஜனதா மிதுரோவும் அவ்வாறே விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களும் சந்திரிகா குமாரதுங்காவை ஜனாதிபதியாக்க தோள் கொடுத்தனர். இந்த அடிபணிவானது ஜனாதிபதி வேட்பாளரின் குள்ளத்தனங்களைக் காட்டிலும், அடிபணிந்தவர்களது அரசியல் வங்குரோத்தினையும் முறைகேடுகளையும் எடுத்துக் காட்டியது. பிற்போக்கு தலைவிரித்தாடும் இந்த வங்குரோத்துக்கும் முறைகேடுகளுக்கும் எதிராக உறுதியாகப் போராடிய ஒரே அரசியல் அமைப்பு, அனைத்துலக குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கை பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி (புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்) மட்டுமே ஆகும்.

### யுக்கக்கின் பேரழிவு

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தம் இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் முன்னேரு போதும் இல்லாத அளவுக்கு உக்கிரம் கண்டதன் மூலம் சிங்கள-தமிழ் தேசிய இனங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ள பேரழிவு அளப்பரியதாகும். அரசாங்கத்தின் ஆண்டின் முழுச் செலவில் நூற்றுக்கு 25 வீதம் இப்போது மக்கள் படுகொலை யுத்தத்துக்கு செலவிடப்படுகிறது. அது ரூபா 5000 கோடிக்கும் அதிகமாகும். 1995ல் அரசாங்கம் சுகாதார செலவுகளுக்கு 1095 கோடி ரூபாய்களை செலவிட்டது. கல்விச் செலவுக்கு 1890 கோடி ரூபாய்களை செலவழித்தது. இதனை 1994ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 1995ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் பாதுகாப்பு செலவு நூற்றுக்கு 50 சதவீதத்தினால் அதிகரித்ததோடு பொதுமக்களின் உயிர்களைக் காக்கவும் எதிர்கால சந்ததியினரின் கண்களைத் திறக்கவும் அவசியமான சுகாதார, கல்வி சேவைகளுக்காகவும் செலவான செலவுடன் ஒப்பிடும்போது அதில் எந்தவிதமான அதிகரிப்பும் ஏற்படவில்லை. அந்நிலையில் 1996ல் வரவு செலவு திட்டத்தில் சுகாதாரத்திற்கும் கல்விக்கும் ஒதுக்கப்பட்ட தொகையையும் விட, இனவாத யுத்தத்துக்கும் இராணுவமயமாக்கத்துக்கும் ஒதுக்கிய தொகை அதனையும் தாண்டி மேலும் 30 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

அந்த விதத்தில், இதனை 1994ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 80 வீதத்தினால் அதிகரிக்க பொதுஜன முன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பொது மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் முதலாளித்துவ அரசியல் அடக்குமுறை இயந்திரமான இராணுவத்தினதும் பொலிசினதும் கொலைகாரப் படையாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் அவசியங்களை இட்டுநிரப்ப செலவிடக்கூடிய பெருமளவிலான பணத்தைக் கொண்டே இந்த அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. 1985-95 க்கும் இடைப்பட்ட ஒரு தசாப்த காலத்தில் யூ.என். பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் கீழ் ஆயுதப் படைகளின் எண்ணிக்கை உலகில் வேறு எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1985-95 தசாப்தத்தில் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு கம்போடியா, ஈரான், பர்மா முதலான நாடுகளில் முறையே (நூற்றுக்கு) 153, 68, 54 வீதங்களாக விளங்கியது.

ஆனால், அதே காலப்பகுதியில் இலங்கையில் இராணுவ-பொலிஸ் படைகளின் தொகை நூற்றுக்கு 483 வீதத்தால் உயர்ந்துள்ளது. அதாவது கம்போடியாவைக் காட்டிலும் மும்மடங்கு அதிகரித்துள்ளது. படைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் இன்று இலங்கை உலகில் 34வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டின் சனத்தொகையும் பரப்பளவும் சிறியது என்பதை மனதில் கொண்டால் இங்கு மக்கள் படுகொலைகள் உக்கிரம் கண்டுள்ளது பளிச்சிடும். 1985ல் 22,000 ஆக இருந்த இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை இன்று 126,000ஐத் தாண்டியுள்ளது. யுத்தத்தில் உயிரிழக்கும் படையினரின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மட்டுமன்றி படைக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது. இது இளம் தலைமுறையினரை மக்கள் படுகொலைக்காரர்களாகவும், மக்கள் படு கொலை யுத்தத்தின் பலிகடாக்களாகவும் மாற்றும் ஒரு பொறிக்கிடங்காக விளங்குகிறது.

யூ.என்.பி.யைப் போலவே பொதுஜன முன்னணி அரசாங்கமும் இளைஞர், யுவதிகளை திரட்டுவது அவர்கள் தம்மையும் பொது மக்களையும் வாழவைக்க வழிவகுக்கும் தொழில்களுக்கு அல்ல, மக்கள் படுகொலை இராணுவத்துக்கேயாகும்.

சுழியோடி
11 ஆம் பக்கம் பார்க்க...

# புலிகளின்வசமிருந்த கடல்பகுதியில் போர்த்துகீசியர்கள் காலத்தில் கட்டப்பட்டிருந்த கோட்டைக்குள் பிரபாகரனை அழைத்துச் சென்றனர்

புலிகளின் முக்கியத்தலைவர்கள் வெளி யேறுவது என்பது தான் அந்தத் திட்டம். புலிகளுக்கேயுரிய போர்வியூகங்களின்படி நடந்த இந்த ஊடறுப்புத் தாக்குதலில் 100க்கும் அதிகமான சிங்கள ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அதே நேரத்தில், பிரபாகரனின்சமகாலத் தலைவரான சொர்ணம் இந்தத் தாக்குதலில் ராணுவத்தினரால் கொல்லப்பட.புலிகளின் முயற்சி தோல்வியடைந்தது.

களத்தில் இழப்புகள் சகஜமானது தான் என்பதைப் புலிகள் அறிவார்கள். ஆனால், தங்களின்இலட்சியமான தமிழீழத் தாயகம் அமைவதற்கு எதை இழக்கவேண்டும் எதைக் காப்பாற்றவேண்டும் என்பதிலும் அவர்கள் கவனமாக இருப்பார்கள். அதனால், மே 17-ந்திகதியன்று புலிகளின் மூத்த தளபதிகள் அனைவரும், தங்களுக்கு வழக்கமாகக்கட்டளையிடும் பிரபாகரனிடம், கோரிக்கை வடிவில் ஒரு கட்டளை பிறப்பித்தனர் என்கிறார்கள் தொடர்பில் உள்ள வட்டாரத்தினர்.

தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் இங்கிருந்து வெளியேற வேண்டிய தருணம் இது.ஏனென்டால், சிங்கள ராணுவம் தனது பாரிய படைகளோடு நெருங்கி விட்டது. இதுஇந்தப் போரின் இறுதிக்கட்டம். இதிலிருந்து தலைவர் அவர்கள் மீண்டால்தான்அடுத்த கட்ட போராட்டத்தை முன்னெடுக்க முடியும். நம்முடைய இலட்சியமானதமிழீழத்தை வென்றெடுக்க முடியும் என்று தளபதிகள் சொன்னதை பிரபாகரன்ஏற்றுக் கொள்ளவில்லையாம். நமது மண்ணின் விடுதலைக்காகத்தான் நான்போராடுகிறேன். அதனால் கடைசி வரை இந்த மண்ணில்தான் இருப்பேன் என பிரபாகரன்உறுதியான குரலில் கூற, தளபதிகள் அவரிடம் நீண்ட நேரம் வாதாடியுள்ளனர். இந்தமண்ணில் உங்கட மகன் நின்று போராடட்டும். எங்கட தலைவராகிய நீங்கள்பாதுகாப்பான இடத்துக்குப் போயாக வேண்டும். அப்போதுதான் இந்தப் போராட்டம்எழுச்சியோடு தொடரும் என்று தங்களுடைய கோரிக்கைக்கு அழுத்தம்கொடுத்திருக்கிறார்கள்.

தளபதிகளின்கோரிக்கையை யோசித்த பிரபாகரன், தனது மகன் சார்லஸ் அந்தோணியை ஈழமண்ணில்இருக்கச் செய்து போரை தொடர்ந்து நடத்தச் சொல்லிவிட்டு, தளபதிகள்கூறுவதுபோல, அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற நீண்ட யோசனைக்குப்பின்சம்மதித் துள்ளார்.

இதையடுத்து,மே17-ந் திகதி ஞாயிறன்று இந்தியாவின் ஆங்கில ஊடகங்களில் ஈழநிலவரம்குறித்து சிங்கள அரசு பரப்பிய தகவல்கள் திரும்பத் திரும்ப ஒளி பரப்பாகிக்கொண்டிருந்த நேரத்தில், புலிகள் ஒருபெருந்தாக்குதல்திட்டத்திற்குத்தங்களைத் தயார்படுத்தியிருந்தனர் என்கிறது கள நிலவரம். மிகச் சரியாகவியூகம் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட அந்தத் திட்டம் இதுதான் என்றும்அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

5000கிலோ வெடிமருந்துகளை தங்கள் உடலில் கட்டிக்கொண்டு 30-க்கும் அதிகமானகரும்புலிகள் ஊடறுப்புத் தாக்குதல் நடத்துவது என்ற திட் டத்தின்படிஇருவரணி, மூவரணியாக கரும்புலிகள் பிரிந்து, முன்னேறி வந்த சிங்களராணுவத்தினர் மீது தற்கொலைத் தாக்குதலை நடத்தினர். விடுதலைப்புலிகளின்மற்ற படையணி யினரும் சரமாரியாக சுட்டுக்கொண்டே ராணுவத்தை எதிர்த்துவீரச்சமர் புரிந்தனர்.

தொடர்ந்துமுன்னேற்றம் கண்டு வந்த சிங்கள ராணுவம் இதனை எதிர்பார்க்க வில்லை. தங்கள்உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் தலைவரைப் பாது காப்பதற்கான ஊடறுப்புத்தாக்குதலில் ஈடுபட்ட புலிகளை ராணுவத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை.இருதரப்பிலும் கடும் சண்டை நடந்த அவ்வேளையில், வெடிமருந்துகளுடன் பாயும்புலிகளைக் கண்டு ராணுவம் சிதறியது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி,பிரபாகரனை அங்கிருந்து பாதுகாப்பாக கொண்டு சென்றனர் தளபதிகள்.

புலிகளின்வசமிருந்த கடல்பகுதியில் போர்த்துகீசியர்கள் காலத்தில் கட்டப் பட்டிருந்தகோட்டை ஒன்று உண்டு. அந்தக் கோட்டைக்குள் பிரபாகரனை அழைத்துச் சென்றனர்.அந்தக் கோட்டையின் கீழ்ப் பகுதியில் பழையகாலத்து சுரங்கப்பாதை உள்ளது.அந்த சுரங்கப்பாதை வழியாக பிரபாகரனை முள்ளிவாய்க்கால் கடற் பகுதிக்குஅழைத்துச்சென்றனர். அங்கே கடற்புலிகளின் படகு தயாராக இருந்தது. அதில்பிரபாகரனை ஏறச் செய்தனர்.


அதேவேளையில், வன்னிக்காட்டில் ராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியது. அப்போது, இன்னொருதற்கொலைப் படையும் படையணியும் வீரம் செறிந்த தாக்குதலைத் தொடர்ந்தது.மீண்டும் ராணுவத்தினர் சிதற, அந்தத் தருணத்தில் பொட்டு அம்மான்பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார். அப்போது திறம்படக் களமாடியவர் சார்லஸ்அந்தோணி. புலிகளின் தாக்குதலில் சிதறி ஓடுவதும், மீண்டும் ராணுவம் தாக்கவருவதுமாக வன்னிக் களம் அதிர்ந்து கொண்டிருந்த நிலையில், கடற்புலிகளின்தளபதியான சூசையை பாதுகாப்பாக வெளியே அனுப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தன்குடும்பத்தின் மீது அதிகப் பாசம் கொண்டவர் சூசை. அவரது மனைவியும் 17 வயதுமகளும் ராணுவத்தின் பிடியில் சிக்கி சில நாட்கள்தான் ஆகின்றன. மனதை கல்லாக்கிக்கொண்டு, இலட்சி யத்தின் அடுத்த கட்டத்தை அடைவதற்காகபாதுகாப்பாக வெளி யேறினார் சூசை.

புலிகளின் அடுத்தடுத்து 23 தற்கொலை தாக்குதல் சம்பவங்களால் இரண்டாயிரத்திற்கும் அதிகமான சிங்கள ராணுவத்தினர் செத்து விழுந்தனர். இந்தத் தாக்குதல்களைமுன்னின்று நடத் திய பிரபாகரனின் மகன் சார்லஸ் அந்தோணி, சிங்களராணுவத்தின் தாக்குதலுக்குள்ளாகி களப்பலி யானார். புலிகளின் கடைசிநேரஅதிரடித் தாக்குதல், சிங்கள ராணுவத்தின் 58-வது டிவிஷ னை நிலைகுலையவைத்தது. புலிகள் அடிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்ற பயபீதியில்ராணுவத்தினர் சிதறி ஓடினர். வன்னிக்காடு புகை மண்டலமானது. கடைசி இலக்கைநெருங்கிவிடலாம் என நினைத்த ராணுவத்தின் கண்களை கரும்புகை மறைத்து,முன்னேற் றத்தை முடக்கியது.

இதனால் பிரபாகரனையும் பொட்டு அம்மான், சூசை ஆகி யோரையும் பாதுகாப்பாகவெளியேற்றுவது சாத்திய மானது. அவர்கள் தனித்தனி படகில் ஒருவர் பின்ஒருவராகப் பயணித்தனர். கடற்புலிகள் பயன் படுத்தும் படகுகளின் வேகம் சிங்களராணுவத்தை மிரள வைக்கக்கூடியது. உதாரணத்திற்கு, ராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்றால் 12 நிமி டங்களில் அந்தப் படகின்மூலமாகச் சென்று விட லாம். மின்னல் பாய்ச்சலில் செல்லும் அத்தகையபடகுகளில் பிரபாகரனும் முக்கியத் தளபதிகளும் பயணித்து, இலங்கையி லிருந்துகிழக்குத் திசை நோக்கி 3 மணி நேரப் பய ணத்தில் பாதுகாப்பான இடத்தைஅடைந்துள்ளதாக கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

சிங்களகடல் எல்லைக்குட்பட்ட ராணுவக் கப்பல்களை ஏமாற்றி விட்டுச் செல்வதுபுலிகளுக்கு கைவந்த கலை. அதே நேரத்தில், சர்வதேச கடல் எல்லையில்இலங்கைக்காகத் தீவிரக் கண்காணிப்பை மேற்கொண்டிருக்கும் இந்தியக் கடற்படைக் கப்பல்களின் கண்ணில் மணலை அள்ளிக்கொட்ட முடியுமா என்ற தயக்கம்புலிகள் தரப்பிலேயே



இருந் திருக்கிறது. ஆனால், இந்தியக் கடற்படைக்குஏற்கனவே உரிய உத்தரவுகள் இடப்பட்டிருந்தன. இலங்கையிலிருந்து வெளியேறும்படகுகளைப் பிடித்துக் கொடுப்பது நமது வேலையல்ல என்பதுதான் அந்த உத்தரவு.பலவித பிரஷர்களால் இந்த உத்தரவு இடப்பட்டிருந்தது. அதனால், அந்த மின்னல்வேகப்படகு சீறிச் சென்றபோது, மேலிடத்து உத்தரவுக்கேற்ப இந்தியக் கடற்படைதனது செயல்பாடுகள் எதையும் மேற்கொள்ளவில்லையாம்.

ஞாயிறன்று புலிகள் மேற்கொண்ட இந்த வெற்றிகரமான ஊடறுப்புத் தாக்குதலுக்குப்பிறகு தான், திங்கட்கிழமையன்று காலையில் கடைசி நிலப்பரப்பையும்பிடிப்பதற்கான கொடூரத்தாக்குதலை சிங்கள ராணுவம் மேற்கொண்டது. பீரங்கிகள்,எறிகணைகள் ஆகியவற்றை அதிகளவில் பயன்படுத்தி தாக்குதலை நடத்தியபடியேமுன்னேறிய ராணுவம், பிரபாகரன் தங்கியிருப்பதாகத் தங்களுக்கு தகவல் வந்தபகுதியில் சகட்டுமேனிக்குத் தாக்குதல் நடத்தி கரும்புகை மண்டல மாக்கியது.எஞ்சியிருந்த புலிகளையும் அப்பாவி மக்களையும் சிங்கள ராணுவத்தின்ஆயுதங்கள் உயிர் குடித்தன.

அந்தத்தாக்குதலின் போது தான், குண்டு துளைக்காத கவசம் கொண்ட ஒரு ஆம்புலன்ஸ்வண்டியில் பிரபாகரனுடன் பொட்டு அம்மான், சூசை ஆகியோர் தப்பிக்கமுயன்றதாகவும் அந்த வண்டிக்கு முன்னால் ஒரு வாகனத்தில் வந்த புலிகள்,ராணுவத்தை நோக்கித் தாக்குதல் நடத்தியதாகவும், பதில் தாக்குதலாக ராக்கெட்லாஞ்சர்களை ராணுவம் ஏவிய போது, பிரபா கரனும் தளபதிகளும் சென்ற ஆம்புலன்ஸ்வண்டி தாக்கப்பட்டு மூவரும் கொல்லப் பட்டதாகவும் சிங்கள அரசுமீடியாக்களுக் குப் பரப்பியது. அதனை இந்தியாவின் ஆங்கில சேனல்கள்நொடிக்கொரு முறை பரப்பிக் கொண்டி ருந்தன.

பிரபாகரன் உள்ளிட்டஅனைத்து தளபதி களின் கதையையும் முடித்துவிட்டோம் என சிங்கள அரசுகொக்கரித்துக் கொண்டிருந்தது. புலிகளை முற்றிலும் ஒழித்துவிட்டதாக பிரணாப்முகர்ஜியைத் தொடர்புகொண்டு ராஜபக்சே தெரிவித்தார்.

பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என இந்திய வெளியுறவுத்துறையும் நம்பியது. இதனை அத்துறையின் செய்தி தொடர் பாளரே பிரஸ் மீட்டில் தெரிவித்தார்.

வன்னிக்காட்டில்சிதறிக் கிடந்த புலிகளின் உடல்களை ராணுவத்தினர் வரிசையாக அடுக்கிவைத்திருந் தனர். சில உடல் கள் கருகியிருந்தன. பிரபாகரன் உள் ளிட்டபுலிகளின் முக்கியத் தலைவர் களை அடையாளம் காண்பதற்காக கருணாவைகொழும்பிலிருந்து தனி ஹெலிகாப்டரில் அழைத்து வந்தது சிங்கள ராணுவம்.புலிகளால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தில் இருந்த கருணா,அவர் கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டார்கள் என்ற தகவலைக் கேட்டு,உற்சாகமாகத்தான் காட்டுப்பகுதிக்கு வந்தார். வரிசையாகக் கிடத்தி வைக்கப்பட்டிருந்த சடலங்களைப் பார்த்த அவருக்கு அதிர்ச்சி.

சிங்களராணுவம் கொன்றதாகச் சொல்லப்பட்ட புலிகளின் தளபதிகளில் ஒருவரின் உடலைக்கூடகருணாவால் அங்கு பார்க்க முடியவில்லை. உதட்டைப் பிதுக்கிவிட்டுத்திரும்பிய கருணா, "மொக்கச் சிங்களனுங்க கோட்டை விட்டுட்டானுங்க' எனத் தனதுசகாக்களிடம் சொல்லி யிருக்கிறார்.

இந்தநிலையில், செவ்வாயன்று காலையில் இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றியஅதிபர் ராஜபக்சே, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி எதுவும்சொல்லாதது பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது. பகல் 12 மணியளவில்,நந்திக்கடல் பகுதியில், தலையில் சுடப்பட்ட பிரபாகரனின் உடல் கிடந்ததாகசிங்கள ராணுவம் அறிவித்து, தான் எடுத்த சில க்ளிப்புங்கு களைமீடியாக்களுக்குக் கொடுத்தது.

பிரபாகரனின்தோற்றத்தை விட மெலிந்திருந்தது உடல். அவர் கையில் எப்போதும்கட்டியிருக்கும் வாட்ச் இல்லை. கழுத்தில் கயிறு அணிந்து பாக் கெட்டில் சயனைடு குப்பி வைத்திருப்பது வழக்கம். ஆனால், சிங்கள ராணுவம் காட்டியபடத்திலோ சயனைடு குப்பி இல்லை. ஐடென்ட்டி கார்டு காட்டப்பட்டது. இப்படி பலமுரண்பாடுகளைக் கொண்ட க்ளிப்புங்கு களைக் காட்டியதுடன், மதியம் கண்டுபிடிக்கப்பட்ட உடலை ஒரு சில மணிநேரத்தில் டி.என்.ஏ சோதனை மூலமாகஉறுதிப்படுத்தி விட்டதாகவும் சிங்கள அரசு தம்பட்ட மடித்தது.

தண்ணீரில்கிடந்த உடல் எனச் சொல்லப்பட்ட நிலையில் கைகள் மட்டும் ஊறியிருக்க, முகம்நன்கு ஷேவ் செய்யப்பட்ட நிலையில் மொழுமொழுவென இளவயது பிரபாகரன் போல்இருந்தது. இது எப்படி சாத்தியம் என்பதை தசாவதாரம் படத்தில் மாஸ்க்அணிந்தகமலைபத்துகெட்டப்புகளில் பார்த்த தொழில்நுட்பம் அறிந்தவர்களால் விளக்கமுடியும் என்கிறார்கள் தடயவியல் துறையினர்.


சிங்களஅரசின் பிரச்சாரத்தை ஊடகங்கள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பிக் கொண்டிருந்தவேளையில், நக்கீரனின் தொடர்ச்சியான முயற்சிகளின் மூலம் கிடைத்திருக்கும்உறுதி யான தகவல், உலகத் தமிழர்களின் நேசத்திற்குரிய விடுதலைப்புலிகளின்தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பதுதான்.

தொடரும்...

நெற்றி பொறியன்



# பிராந்தியச் செய்திகள்



## வவுனியா வைத்தியசாலையில் தாதியர்களுக்குக் கொரோனா தொற்று!

வவுனியா பொது வைத்தியசாலையில் கடமை புரியும் தாதிய உத்தியோகத்தர்கள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் பணி புரியும் தாதியொருவருக்கு அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்து, அவருடன் நெருங்கிப் பழகிய மற்றொரு தாதிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுப்பதற்காக மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன. இதேவேளை குறித்த தாதியர்களுடன் தொடர்புகளைப் பேணிய சிலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், கொரோனா தொற்று கண்டறியப்பட்ட தாதியர் இருவரையும் கிளிநொச்சி மற்றும் கொழும்பில் அமைந்துள்ள கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.




## கிளிநொச்சியில் கோர விபத்து - தந்தை மற்றும் இரு மகன்கள் உயிரிழப்பு!

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இத்தாவில் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி கார் காணப்படுவதாவும் அதற்கு நேரெதிரே டிப்பர் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வீதியைவிட்டு விலகிய ரிப்பர் காருடன் மோதி விபத்து இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் 9 மற்றும் 12 வயதுகளையுடைய சிறுவர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம், சம்பவத்தில் படுகாயம் அடைந்த சிறுவர்களின் தந்தை பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில், பளை தர்மங்கேணி பகுதியைச் சேர்ந்த சற்குணம் சாருஜன், சற்குணம் சாரங்கன் என்ற இரு சிறுவர்களே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவர்களின் சடலம் பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## தரமற்ற தேங்காய் எண்ணெயை இறக்குமதிக்கு அனுமதி வழங்க கூடாது – அரசாங்கத்திடம் கோரிக்கை

தரமற்ற தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய தனிநபர்களை அனுமதிக்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அன்று (சனிக்கிழமை) கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இவ்வாறு கூறினார்.

சமீபத்தில் தரமற்ற தேங்காய் எண்ணெய் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டமையை சுட்டிக்காட்டிய அவர், நுகர்வுக்கு ஏற்ற எண்ணையை மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

எனவே இவ்வாறு தரமற்ற தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்து சுத்திகரித்து பின்னர் சந்தைக்கு வழங்குவதற்கான அனுமதியை வழங்க கூடாது என்றும் அவர் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.



## தாமரைப்பூ பறிக்கச்சென்ற ஆசிரியருக்கு நேர்ந்த கதி

வவுனியாவில் தாமரைப்பூ பறிக்கச்சென்ற ஆசிரியர் ஒருவர் வைரவபுளியங்குளம் குளப்பகுதியில் இருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார். குறித்த ஆசிரியர் அந்தப் பகுதியில் உள்ள ஆலயத்தின் தேர் திருவிழாவுக்காக குளத்தில் தாமரைப்பூ பறிக்கச் சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவரை காணவில்லை என்பதால், அப்பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் தேடுதல் மேற்கொண்டதுடன், சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து, நீண்ட நேர தேடுதலின் பின்னர் குறித்த ஆசிரியரின் சடலம் குளத்தில் இருந்து பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியரான 33 வயதான பரந்தாமன் என்பவரே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் இராணுவத்தின் கடேட் படைப்பிரிவின் கெப்டன் தரத்தை சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில், சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






## உடல் எடை கூடி குண்டாக மாறிய இளம் நடிகை ரஷ்மிகா மந்தனா!

கன்னட திரைப்படங்கள் மூலம் திரையுலகில் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை ரஷ்மிகா மந்தனா.



ஆனால் தெலுங்கில் வெளியான கீதா கோவிந்தம் படம் தான் இவருக்கு தென்னிந்திய அளவில் பிரபலமான நடிகையாக மாற்றியது.

மேலும் தற்போது கார்த்தி நடிப்பில் உருவாகியுள்ள சுல்தான் படத்தின் மூலம் தமிழ் திரையுலகிலும் கதாநாயகியாக அறிமுகமாக இருக்கிறார்.

இப்படம் வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில் நடிகை ரஷ்மிகா மந்தனா உடல் எடை கூட குண்டாக மாறியுள்ளது போல் தெரிகிறார்.

எப்போதும் ஜிம் ஒர்கவுட் செய்து உடலை ஸ்லிம்மாக வைத்து வந்த நடிகை ரஷ்மிகா மந்தனா, உடல் எடை கூடி குண்டாக மாறியுள்ளது, ரசிகர்களுக்கு ஷாக் கொடுத்துள்ளது.

## விஜயின் 65 ஆவது திரைப்படம் : கதாநாயகி தெரிவு செய்யப்பட்டார்!



நடிகர் விஜய் நடிக்கும் 65 ஆவது திரைப்படத்திற்கான கதாநாயகி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாஸ்டர் திரைப்படத்திற்கு பிறகு நடிகர் விஜய், நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் நடிக்கவுள்ளார்.

இந்த திரைப்படத்தின் கதாநாயகிக்கான தேர்வு நடைபெற்று வந்த நிலையில், பூஜா ஹெக்டே நடிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் ஜீவா நடிப்பில் வெளியான முகமூடி திரைப்படம் மூலம் அறிமுகமான இவர் போதிய வாய்புகள் இன்மையால் பிற மொழிகளில் நடித்து வந்தார்.

தற்போது விஜயின் இந்த திரைப்படம் மூலம் மீண்டும் தமிழுக்கு வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## படங்களில் நடிப்பதற்கு முன் யோகி பாபு இப்படி ஒரு சீரியல் நடித்துள்ளாரா?

படங்களில் நடித்துவரும் நடிகர்கள் பலர் ஆரம்ப கட்டத்திலேயே பெரிய வாய்ப்பை பெறுவதில்லை. அப்படி ஒரு சிலருக்கு மட்டுமே லக் அடிக்கும்.



நிறைய கலைஞர்கள் சின்னத்திரையில் நடிக்க தொடங்கி தான் படங்களில் வாய்ப்பு கிடைத்து பெரிய நடிகர்களாக வளர்கிறார்கள்.

அப்படி சந்தானம், சிவகார்த்திகேயன் என கூறிக்கொண்டு போகலாம். அவர்களின் லிஸ்டில் யோகி பாபுவும் இடம்பெறுவார்.

சின்னத்திரையில் கிடைக்கும் வாய்ப்புகளில் நடித்து வந்த இவருக்கு படங்களில் வாய்ப்பு கிடைக்க இப்போது முன்னணி காமெடி நடிகராக வளர்ந்து இருக்கிறார்.

இவர் லொள்ளு சபாவில் நடித்துள்ளார். ஆனால் அதற்கும் முன் My Name Is மங்கம்மா என்கிற சீரியலில் யோகி பாபு நடித்துள்ளார். இதுதான் யோகி பாபுவின் சினிமா பயண ஆரம்பம் என்றே கூறலாம்.

## விக்னேஷ் சிவன் – நயன்தாராவுக்கு நிச்சயதார்த்தம் முடிந்ததா?



நடிகை நயன்தாராவும், இயக்குனர் விக்னேஷ் சிவனும், 2015-ல் நானும் ரவுடிதான் படப்பிடிப்பில் நெருக்கமாகி 6 வருடமாக காதலித்து வருகிறார்கள்

நடிகை நயன்தாராவும், இயக்குனர் விக்னேஷ் சிவனும்தமிழ்படஉலகில்பரபரப்பாகபேசப்படும் காதல் ஜோடியாக வலம் வருகிறார்கள். 2015-ல் நானும் ரவுடிதான் படப்பிடிப்பில் நெருக்கமாகி 6 வருடமாக காதலித்து வருகிறார்கள். ஜோடியாக சுற்றும் புகைப்படங்களை அடிக்கடி வெளியிடுகிறார்கள். இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று ரசிகர்களும் வலைத்தளத்தில் கோரிக்கை வைத்து வருகின்றனர்.



இந்த வருடத்தில் அவர்களது திருமணம் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. இந்த நிலையில் விக்னேஷ் சிவன் தனது சமூக வலைதள பக்கத்தில் ஒரு புகைப்படத்தை வெளியிட்டுஉள்ளார். அந்தபடத்தில்விக்னேஷ் சிவன் மார்பில் நயன்தாரா சாய்ந்து இருக்கிறார். நயன்தாராவின் கையில் பிளாட்டினம் மோதிரம் பளிச்சிடுகிறது.

அந்த மோதிர புகைப்படத்தின் கீழ், 'விரலோடு உயிர்கூட கோர்த்து' என்ற பதிவையும் விக்னேஷ் சிவன் பகிர்ந்துள்ளார். இந்த புகைப்படத்தை வைத்து நயன்தாரா கையில் அணிந்து இருப்பது நிச்சயதார்த்த மோதிரம் என்றும் விக்னேஷ் சிவனுக்கும் அவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது என்றும் சமூக வலைத்தளத்தில் தகவல் பரவி வருகிறது. அந்த புகைப்படத்தின் கீழ் நிச்சயதார்த்தம் முடிந்த இருவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள் என்று ரசிகர்கள் பதிவிட்டு வருகிறார்கள். ஆனாலும் நிச்சயதார்த்தம் நடந்ததா? என்பதை இருவரும் உறுதிப்படுத்தவில்லை. நயன்தாரா தற்போது ரஜினியுடன் அண்ணாத்த, விக்னேஷ் சிவன் இயக்கத்தில் காத்து வாக்குல ரெண்டு காதல் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

## பிகினி உடையில் போஸ் கொடுத்த பிக்பாஸ் ஷிவானி – வைரலாகும் புகைப்படம்

பிக்பாஸ் 4-வது சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டு பிரபலமான நடிகை ஷிவானி, தற்போது மாலத்தீவுக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பகல் நிலவு என்ற சீரியல் மூலம் நடிகையானவர் ஷிவானி நாராயணன். அதன் பிறகு கடைக்குட்டி சிங்கம், இரட்டை ரோஜா ஆகிய சீரியல்களிலும் ஹீரோயினாக நடித்தார். கடந்தாண்டு நடந்த பிக்பாஸ் 4-வது சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டு மிகவும் பிரபலமானார்.

சமூக வலைத்தளத்தில் ஆக்டிவாக இருக்கும் ஷிவானிக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். தினமும் கலர்புல்லான புகைப்படங்களை பகிர்வதை வாடிக்கையாக வைத்திருக்கிறார். அதோடு நடன வீடியோக்களையும் அவ்வப்போது பகிர்ந்து வருகிறார்.

இந்நிலையில், தற்போது மாலத்தீவுக்கு சுற்றுலா சென்றுள்ள, நடிகை ஷிவானி, அங்கு பிகினி உடையில் போஸ் கொடுத்தவாரு எடுத்த புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பகிர்ந்திருந்தார். 2 லட்சத்துக்கும் அதிகமான லைக்குகளை பெற்றுள்ள இந்த புகைப்படம் வைரலாகி வருகிறது.





தொகுப்பு :– ஹாசினி




## பனியும், வெயிலும் சேர்ந்த காலத்தில் சருமத்தை எப்படி பராமரிப்பது?

தக்காளியை பேஸ்ட் போல் அரைத்து முகத்தில் தடவலாம். அல்லது துண்டு துண்டாக நறுக்கி அப்படியே முகத்தில் ஒட்டிவைத்து கொள்ளலாம். ஐந்து நிமிடம் கழித்து, குளிர்ந்த நீரில் முகத்தை கழுவி விடலாம்,

2 தேக்கரண்டி சர்க்கரை மற்றும் 4 எலுமிச்சை பழங்களில் சாறு கலந்து சருமத்தின் மசாஜ் செய்யவும். சில நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவி விடவும். இது சருமத்திலுள்ள அழுக்குகளை அகற்றும். மேலும் சர்க்கரையில் உள்ள கிளைகோலிக் அமிலம் சருமத்தில் உள்ள செல்களில் ஊடுருவி, புத்துணர்ச்சியை உண்டாக்கும். சருமத்தில் ஏற்படும் வறட்சியை தடுக்கும்.



தினமும் இரவு கொழுப்பு நீக்கப்பட்ட தயிரை சருமத்தின் தேய்த்து ஸ்கிரப் செய்யவும். இது சருமத்தை சுத்தமாகவும், ஈரப்பதத்துடனும் வைத்திருக்க உதவும்.

நன்கு கனிந்த வாழைப்பழத்தை பிசைந்து சருமத்தில் தடவி மசாஜ் செய்யவும். இது சருமத்தில் ஏற்படும் வறட்சியை கட்டுப்படுத்துவதுடன் தேவையான ஊட்டச்சத்தையும் அளிக்கும்.

பப்பாளி மிகவும் ஊட்டச்சத்து நிறைந்தது. பப்பாளி பழத்தை நன்கு அரைத்து சருமத்தில் தடவவும். காய்ந்தவுடன் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். பப்பாளியில் உள்ள நொதிகள் சருமத்தில் உள்ள அழுக்குகளை நீக்கி செல்களுக்கு புத்துணர்வை உண்டாக்கும்.

கடலை மாவை அனைத்து வகையான சருமத்தினரும் பயன்படுத்தலாம். கடலை மாவை தண்ணீரில் குழைத்து சோப்புக்கு பதிலாக பயன்படுத்தலாம்.

வீட்டை விட்டு வெளியில் செல்லும் முன் தேங்காய் எண்ணெய்யை சருமத்தில் தேய்த்து கொள்வது நல்லது. இது சருமத்தை மிருதுவாகவும், ஈரப்பதத்துடனும் வைத்திருக்க உதவும்.

## கற்றாழை ஜெல்லின் மூலம் தலைமுடி பிரச்சனைகளுக்கு தீர்வு !!

தலையில் பொடுகு ஏற்பட ஏராளமான காரணங்கள் உள்ளன. எண்ணெய் வழிந்த தலை, தலையில் அதிகப்படியான இறந்த செல்கள், சுகாதாரமின்மை, தொடர்ந்து தலையினை சுத்தமாக வைத்துக் கொள்ளலாமல் இருத்தல் உள்ளிட்டவை இதற்குக் காரணமாகும்.

கற்றாழை ஜெல்லில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியானது இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும் எளிதில் தீர்க்கும் குணாதசியங்களைக் கொண்டுள்ளது.

கற்றாழை ஜெல்லானது சரும பிரச்சனைகளுக்கு மட்டுமல்ல, முடி தொடர்பான பிரச்சனைகளுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. பெரும்பாலும், அடர்த்தியான முடிகள் வளர இது உதவுகிறது.

தலையில் ஏற்படும் புழுவெட்டு போன்ற பிரச்சனைகளுக்கு கற்றாழை ஜெல்லானது மிகச் சிறந்த மருந்தாக பயன்படுகிறது. தலை முடியின் வேரில் ஏற்படும் அலர்ஜிக்கு கற்றாழையே சிறந்த மருந்தாக பரிந்துரைக்கப்படுகிறது.

கற்றாழை ஜெல்லினை தலை முழுவதும் தடவி, பின் சிறிது நேரத்திற்குப் பிறகு சேம்புக் கொண்டு கழுவுவதன் மூலம் புழுவெட்டில் இருந்து தலையினைக் காக்கலாம்.

கற்றாழையில் உள்ள புரதச் சத்துக்கள் தலையில் உள்ள இறந்த செல்களை நீக்கி புதிய செல்களை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் பலவீனமான மற்றும் உதிர்ந்த முடிகள் நீங்கி புதியதாகவும், அடர்த்தியாகவும் முடிகள் வளர்கிறது.



## முகப்பரு வருவதை தடுப்பதற்கான எளிய இயற்கை அழகு குறிப்புகள் !!



முகத்தில் வரும் பருக்களால் அழகை கெடுப்பதாகவே உள்ளது. இதனால் அவர்கள் தங்கள் சரும அழகு கெடுவதாக நினைகின்றனர்.

முகத்தில் வளரும் பருக்களை நீக்க கண்ட கிரீம்களை உபயோகபடுத்த துவங்கிவிட்டனர். இவற்றால் நிவாரணம் கிடைக்கிறதோ இல்லையோ சரும பாதிப்புகள் தான் ஏற்படுகின்றன.

அடிப்படையில் உடலில் கொழுப்புப் பொருள் அதிகமானால் அது வியர்வை மூலமாக வெளியேறும். ஆனால் சில சமயங்களில் கொழுப்புப் பொருளானது வியர்வை மூலம் வெளியேறாமல் முகத்தில் தேங்கும். அந்த கொழுப்பு பொருட்களே பருவாக உருமாறுகின்றன. அது போல முகம் கழுவாமல் பவுடர் போட்டாலும் பரு வரும்.

பரு வந்து விட்டால் அதை நகம் படாமல் பாதுக்காப்பது நல்லது. சிலர் பருவை கிள்ளி விடுகின்றனர். அவ்வாறு செய்தால் பரு மேலும், மேலும் அதிகமாகிக் கொண்டு தான் போகுமே தவிர குறையாது.

பரு வந்து விட்டால் அதை கிள்ள கூடாது. அத்துடன் கொழுப்புப் பொருட்களை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக தயிர், மாமிசம், சாக்லெட், ஐஸ்க்ரீம், எண்ணையில் வறுத்த மற்றும் பொறித்த பலகாரங்களை சாப்பிடக் கூடாது.

பரு உருவாக இன்னொரு முக்கியக் காரணம் மலச்சிக்கல். இந்த மலச் சிக்கலை போக்க தினமும் உணவில் கீரைகளை சேர்த்துக் கொள்வது நல்லது. இது தவிர ஒருநாளைக்கு குறைந்தது எட்டு டம்பளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

அடிப்படையில் ஆரோக்கியமான தூக்கத்தை கடைப்பிடிப்பது நல்லது. பச்சைத் தண்ணீரில் குளித்து அதிக எண்ணெய் இல்லாத உணவை சாப்பிடுவது நல்லது.

**தொகுப்பு :– ஹாசினி**

05ஆம் பக்க தொடர்ச்சி...

அதிபர் பிரேமதாசா, அதிபர் வேட்பாளர் காமினி திசநாயகா மற்றும் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் மற்றும் லட்சுமண் கதிர்காமர் ஆகியோர் படுகொலையிலும் பிரபாகரன் குற்றம் சாட்டப்பட்டார். 33 நாடுகள் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தன. இன்டர்போலும் இவரைத் தேடியது.

முப்படை அமைப்பு: புலிகள் (தரைப்படை), கடற்புலிகள் (கடல் படை - 1984 ம் ஆண்டு முதல் பிரபாகரன் முயற்சி செய்ததன் விளைவாக 1992ல் உருவாக்கப்பட்டது) மற்றும் வான்புலிகள் (விமானப்படை) ஆகிய மூன்று படைகளையும் கொண்ட ஒரே போராளி அமைப்பு என்ற பெயரைப் பெற்றது. 1993ல் உயிரை துச்சமாக எண்ணி, ரகசியமாக தாக்கும் கரும்புலி தற்கொலை படையினரையும் பிரபாகரன் துவக்கினார்.

கடந்த, 2002ல் நார்வே முயற்சியால் அமைதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது பிரபாகரன் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அமைதி முயற்சிகள் வழக்கம் போல் வெற்றி பெறவில்லை. இருதரப்பினர் இடையிலும் மோதல் தவிர்க்க முடியாதது ஆனது. 2005ல் ராஜபக்ஷே அதிபர் ஆனபின், நார்வே அமைதி முயற்சி முற்றிலுமாக முடிவுக்கு வந்தது. புலிகள் ராணுவப்பிரிவில் இருந்த கருணா அம்மான், 2004 மார்ச்சில் பிரபாகரனிடமிருந்து விலகியது, அந்த அமைப்புக்கு பெரிய சவாலாக அமைந்தது. கடந்த ஆண்டு இறுதியில், புலிகளின் கிழக்குப் பகுதியில் கடுமையாக சண்டை நடந்தது. 2009 புலிகளுக்கு சோகமானதாகவே இருந்தது. ஜனவரி 2ல், கிளிநொச்சியை ராணுவம் கைப்பற்றியது புலிகளுக்கு பெரிய அடியானது. ஜனவரி 25ல் முல்லைத்தீவை கைப்பற்றியது. வன்னியில் புதுக்குடியிருப்பு பகுதிக்குள் புலிகளின் எல்லையை ராணுவம் நெருக்கியது. இப்பகுதியில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள், இரு தரப்பு சண்டையில் சிக்கினர். பின் முள்ளிவாய்க்கால் தீபகற்ப பகுதியில் வேறு இடங்களுக்கு தப்ப முடியாத படி ராணுவம் நெருக்கியது.

இப்பகுதியில், பொதுமக்கள் மீதும் புலிகள் மீதும் ராணுவம் தாக்கியதில் நூற்றுக் கணக் கான புலிகள் மற்றும் அப்பாவி பொதுமக்கள் பலியாகினர். புலிகள் இருக்கும் இடத் துக்கு சில மீட்டர் தூரம் வரை சென்ற ராணுவம், தாக்குதல் நடத்தியதில் பிரபாகரன் மற்றும் அரசியல் பிரிவு தலைவர் நடேசன், பிரபாகரன் மகன் அந்தோணி மற்றும் பொட்டு அம்மான் உள்ளிட்டோர் பலியாகிவிட்டதாக இலங்கை ராணுவம் அறிவித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் ஈழப் போராட்டத்தில் 70 ஆயிரம் பேர் பலியாகியிருக்கின்றனர். வான்படை உருவாக காரணமான சார்லஸ்: புலிகளின் வான்படை உருவாக காரணமாக இருந்த சார்லஸ் அந்தோணி பலியானது எப்படி என்பது குறித்து இலங்கை ராணுவம் தெரிவித்துள்ளது. இலங்கை ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கை: புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் அன்று அதிகாலை ராணுவம் கடும் தாக்குதல் நடத்தியது. தாக்குதல் முடிவுக்கு வந்த பின், ராணுவ வீரர்கள் இங்கு தேடுதல் வேட்டை நடத்தினர். சண்டையில் பலியான புலிகளின் உடல்களை அடையாளம் காணும் பணி நடந்தது. இதில், 24 வயது மதிக்கத்தக்க சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது, புலிகள் தலைவர் பிரபாகரனின் மூத்த மகன் சார்லஸ் அந்தோணியின் சடலம் என தெரிய வந்துள்ளது. புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் நடேசனும் சண்டையில் பலியானார். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்லஸ் அந்தோணி இறந்த நிலையில் இருப்பது போல் எடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தையும் இலங்கை ராணுவம் வெளியிட்டுள்ளது. சார்லஸ், ஏரோ நாட்டிகல் இன்ஜினியரிங் படித்தவர். புலிகள் வான்படையை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தவர். தகவல் தொடர்பு பிரிவையும் கவனித்து வந்தார். சமீபகாலமாக நடந்த சண்டைகளை சார்லஸ் தான் தலைமையேற்று நடத்தியதாக தகவல்கள் வெளியாயின. அதேபோல், தமிழ்ச்செல்வன் மறைவுக்குப் பின் புலிகள் அரசியல் பிரிவு தலைவராக பதவியேற்றவர் நடேசன். இவர், இலங்கையில் முன்பு பொலீஸ் கான்ஸ்டபிளாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உயிருடன் கைது செய்ய முயன்றது இலங்கை ராணுவம். ஆனால் அவர் கடைசிவரை ராணுவத்திடம் சிக்கவில்லை என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த மே 15, 2009ல் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களில் கூறப்பட்ட தகவலை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. அதில், விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போரின்போது பிரபாகரனை உயிருடன் கைது செய்வதற்கு இலங்கை அதிபர் ராஜபக்சே உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் ராணுவத்தினருக்கு கடும் உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்கள். அதற்காக என்ன விலை கொடுக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர். அதன் காரணமாகவே போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள் இழப்பு குறிப்பு அரசாங்கமோ பாதுகாப்புப் படைகளோ கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. ஆனாலும் ராஜபக்சேவுக்கும் அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாயவுக்கும் போர் களத்தின் உண்மையான நிலவரம் பற்றிய சரியான தகவல் ஒருங்கிணைப்பு கிடைக்கவில்லை. இதனால் இலங்கை அரசு விரும்பியதுபோல பிரபாகரன்உயிருடன்அராசங்கப்படைகளிடம் சிக்கவில்லை, என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், ஏப்ரல் 25, 2009 ல் புலிகளுடனான போர் நிறுத்தத்துக்கு சம்மதிப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரிடம் ராஜபக்சே கூறியதாகவும், இந்தத் தகவல் இந்திய வெளியுறவுச்செயலர் நாராயணனுக்கு தெரியும் என்றும், ஆனால் கடைசி வரை அதனை வெளியிடாமலேயே விட்டுவிட்டதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ள இந்நிலையில் சர்வதேசப் பேச்சுக்களாக திம்பு முதல் டோக்கியோ தொடர்ந்து ஜெனிவா வரை தமிழர் போராட்டம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் இனப்படுகொலை தொடர்பாகவும் உலகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தொடர்பாகவும் முகவரியை எடுத்துத்தந்தவர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் என்பதும் குறிப்பிடத்தக்கவிடயம்.

04ஆம் பக்க தொடர்ச்சி...

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெரிதும் எதிர்பார்க்காதளவிற்கான சம்பவமே இது. ஒருசிலவேளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கூறாதவிடயங்களைக்கூடபதிவுசெய்யப்படாத பல இணையத்தளங்களில் செய்திகள் வெளிவருகின்றன. இதுவும் அரசாங்கத்தினுடைய சதித்திட்டங்கள் என்று கூறப்படுகின்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் இதுவரை-ரயில் தமிழ்த்தேசியத்திற்காகவும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் குரல்கொடுத்து வந்த காலம் கடந்து அரசு கொடுக்கும் உயர் பதவிகளுக்காக, பணத்திற்காக அல்லது உயிர் அச்சுறுத்தல்களுக்காக தமது துணிகரமான அரசியலை, தமிழ் மக்களின் விடிவுக்கான அரசியலை செய்யமுடியாதிருப்பது கவலையளிக்கின்றது. அரசாங்கம் எத்தனை தடைகளை விதித்தாலும் மீள மீள எழுபவன் தமிழன் என்கின்ற கோட்பாட்டின் கீழ் செயற்படுவது எம் இனத்திற்கு நல்லது. இல்லாவிட்டால் நீங்களே தூக்கைமாட்டி தொங்கிக்கொள்ளுங்கள்

06ஆம் பக்க தொடர்ச்சி...

இளம் தலைமுறையினரின் சிருஷ்டித் திறன்மிக்க உற்பத்திச்சக்திகள்கசக்கிப்பிழியப்படுவதோடு அலுக்கோசு கொலைகாரப் படையாகவும் அவர்கள் மாற்றப்படுகின்றனர். அவர்களால் கொலைசெய்யப்பட்டோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் தாண்டியுள்ளதோடு கொலையுண்ட படையினரின் எண்ணிக்கை பல்லாயிரங்களைத் தாண்டியுள்ளது. கொலையுண்ட லட்சக் கணக்கானோரிடையே முதலாளித்துவக் குடும்பங்களில் இருந்து வருவோரின் எண்ணிக்கையை தனியொருவரின் கைவிரல்களைக் கொண்டே கணித்துவிடலாம். முதலாளி வர்க்கத்தினால் தமது சுய அவசியங்களுக்காக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இரத்தக் களரியில் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கு மேலும் சாட்சி வேண்டுமா? இனவாத யுத்தத்தினை மையமாக கொண்டு கட்டவிழ்க்கப்பட்டுள்ள இந்த மக்கட் படுகொலையின் முக்கிய பயங்கர பணி யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களினால் இட்டு நிரப்பபட்டுள்ள அதே வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தமிழ் இயக்கங்களின் துணை நடவடிக்கைகளின் கொடுமைகளை எந்த விதத்திலும் குறைந்தவையாக நோக்க முடியாது. இனவாத யுத்தத்தினதும் அதன் பின்னணியில் வளர்ச்சி கண்டுள்ள ஒடுக்குமுறை அரச இயந்திரத்தினதும் நச்சுத்தனமான பெறுபேறுகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் மட்டுப்பட்டது என்ற கருத்து ஒரு பயங்கரமான நப்பாசையாகும் என்பது இதுகாறும் சகலரும் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்குத் தெளிவாகியுள்ளது.

## சமூக சீரழிவு

இனவாத யுத்தம் என்பது முழு நாட்டையும் படுகொலைக்குள்ளும், பயங்கரங்களுக்குள்ளும் மூழ்கடிக்கும் ஒரு ஆரம்ப நடவடிக்கையாகும் என சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் (பு.க.க.) மட்டுமே தோடர்ந்து சுட்டிக்காட்டி வந்துள்ளன. இதன் உண்மை, 1988-90 காலப்பகுதியில் இடம்பெற்ற இளைஞர் படுகொலைகள் மூலம் நாடு பூராவும் பரந்து விரிந்து, இன்னமும் இடத்துக்கு இடம் வெறிபிடித்துள்ள அரசியல் காடைத்தன இயக்கங்கள் மூலமும், தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களது போராட்டங்களையும் ஊர்வலங்களையும் இரத்தத்தினால் மூழ்கடிக்க இராணுவ-பொலிஸ் அதிகாரத்தினைப் பயன்படுத்துவதன் மூலமும்,மின்சாரசபைஊழியர்போராட்டத்தில் தலைதுக்கியது போல் அவசரகால சட்ட ஆட்சியின் கீழ் தொடுக்கப்பட்ட மக்கள் படுகொலை இயக்கங்கள் மூலமும் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இவை யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்ட மக்கள் படுகொலை இயக்கங்களாகும். இவற்றுக்கு மேலதிகமாக முதலாளித்துவ அமைப்பின் கீழ் வாழ்க்கைக்கு வழியில்லாத நிலமைக்குள் தள்ளப்பட்டு குழம்பிப் போயுள்ள மக்கள், கொலைகள், கொள்ளைகளில் ஈடுபடுவதோடு தற்கொலை செய்துகொள்ளவும் திரும்பியுள்ளமை பொறுக்க முடியாத சமூகச் சீரழிவினை வெளிக்காட்டுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 1995 ஜீன் 1ம் திகதி தொடக்கம் 1996 ஜீன்1ம் திகதி வரையிலான ஒரு வருட காலத்துள் 1270 கொலைகள் இடம்பொற்றுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதாவது ஒரு நாளைக்கு ஏறக்குறைய 5 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வருடத்தில் 2246 கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வாறானால் ஒரு நாளைக்கு 7 கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. 565 வாகன கொள்ளையடிப்புகள் 43 கற்பழிப்பு சம்பவங்களும் இக்காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சமூகக் கலாச்சார மரபுகள் மூலம் போடப்பட்டுள்ள தடைகளின் கீழ் கற்பழிப்பு பற்றிச் செய்யப்படும் முறைப்பாடுகள் இலங்கை போன்ற நாடுகளில் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை கணக்கில் கொள்ளும்போது இந்தப் புள்ளி விபரம் எந்தளவுக்குப் பரந்துபட்டுள்ள சமூக முறைகேடுகளின் ஒரு சிறிய வெளிப்பாடு மட்டுமே என்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. பொலிஸ் அறிக்கைகள் மூலம் அம்பலமாகும் இந்த சமூக அழிவு, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் இடம்பெற்றவை மட்டுமே. இனவாத யுத்தப் பிராந்தியமான வடக்கு-கிழக்கில் இடம்பெறும் கொலைகள், சமூக ஊழல்கள் இதைக் காட்டிலும் பிரமாண்டமானவை என்பதைக் கூற வேண்டுமா?

காதில் கேட்டவுடன் மெய்சிலிர்க்க வைக்கும் அளவிலான சமூகப் பேரழிவுகள் நடைபெறும் இன்றைய நிலைக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது யார்? சாதாரண பொதுமக்களா? அல்லது அம்மக்களைச் சிறைப்படுத்தி ஆதாள பாதாளத்தில் வீழ்ந்துள்ள முதலாளித்துவ அமைப்பும் அதன் ஆட்சியாளர்களுமா? அதனுடன் இணைந்த இன்னொரு கேள்வியும் உள்ளது. பொது மக்களின் பேரில் பேசிக்கொண்டு முதலாளித்துவ ஆட்சியின் மரணத்தை தள்ளிப்போட 1970-77 கூட்டரசாங்கத்துக்கும், யூ.என்.பி. க்கும் போல் இன்றைய பொதுஜன முன்னணி அரசங்கத்துக்கும் முண்டு கொடுத்துள்ள துரோக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் இந்த நச்சுப் பொறுப்பில் இருந்துவிடுபட முடியுமா? இந்தக்கேள்விகளை எழுப்புவதே அவற்றுக்கு சரியான பதில்களை வழங்கும். நாம் மேலும் கேள்விகளை எழுப்பிப் பார்ப்போம்.

இந்தத் துரோகத்துடன் கூட்டுச் சேராமல் யூ.என்.பி. முதலாளித்துவ கூட்டரசாங்க ஆட்சியை தூக்கி வீசவும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்ந்து, சமூக சமத்துவத்தையும் நீதியின் அடிப்படையில் சமாதானமான சுபிட்சமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டும் பொது மக்களுக்கு வழிகாட்டிய கட்சி இருந்ததா? அதற்குப் பதில் 'நிச்சயமாக ஆம்' என்பதேயாகும். அது சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே ஆகும்.

நாம் மீண்டும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் முகம் கொடுக்கும் சமுகப் பேரழிவுகள் பற்றிய பிரச்சனைக்குத் திரும்புவோம். இதற்கு முன்னர் சுட்டிக் காட்டியது போல், இராணுவமயமாக்க வேகத்தைப்போலவேதற்கொலைசம்பவங்கள் அளவுகணக்கற்ற விதத்தில் அதிகரிப்பதிலும் இலங்கை உலகிலேயே முதலிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. சனத்தொகையின் ஒவ்வொருஇலட்சத்துக்கும்47பேர்தற்கொலை செய்து கொள்கின்றனர். ஒரு நாளைக்கு 22பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர். தற்கொலை செய்து கொள்வோரிடையே அதிகமானோர் கடன் பளுவைச் செலுத்த முடியாமை, தனது குடும்பத்துக்கு ஒரு வேளை சாப்பாடு கொடுக்க முடியாமை, வேலை நீக்கம் போன்ற காரணங்களினால் இந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தாங்க முடியாததும் விடுவித்துக்கொள்ள முடியாததுமான தரித்திர நிலைமைக்குள் தாம் அகப்பட்டுக்கொண்டுள்ளோம் என்ற மன உளைச்சலில் அவர்கள் தமது உயிரை மாய்த்துக்கொள்ள நெருக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இங்ஙனம் தற்கொலை செய்துகொள்வது அவர்களைப்பற்றிப்பிடித்துக் கொண்டுள்ள நாற்றம் கண்ட முதலாளித்துவ சமூக அமைப்புக்கு எதிராக சுமத்தப்படும் பலத்த குற்றச்சாட்டாகும்.

இந்தச் சமுகச் சீரழிவு முதலாளித்துவ அமைப்பின் கீழ் உக்கிரம் கண்டுள்ளதை அம்பலமாக்கும் இன்னோரு விடயம் நாடு பூராவும் சிறுவர் பாலியல் உழைப்பு பரந்து பட்டு வருவதாகும். 6 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட 10000 க்கும் அதிகமான சிறுவர் சிறுமியர் இந்தக் மோசமான தொழிலுக்கு பலியாக்கப்பட்டுள்ளதாக ஆய்வு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

2001ம் ஆண்டளவில் இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை 80000ஐ தாண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. முழுச் சனத்தொகையில் கிட்டத்தட்ட சரி அரைவாசிப் பேர் மாதம் ரூபா.500க்கும் குறைவான வருமானம் பெற்று வாழ்க்கையை ஓட்டும் நிலையில், அழிவுமிக்க பெறுபேறுகள் சகல வகையிலும் வெளிப்பாடாகத் தொடங்கி உள்ளது.

**தொடரும்...**

# மற்றுமொரு யுத்தத்திற்குத் தயாராகும் இலங்கையரசு

யுத்தம்முடிவுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள இலங்கையரசு, மீண்டும் யுத்தம் கட்டவிழ்த்து விடுவதற்கான சதித்திட்டங்கள் அரச தரப்பிலிருந்து கசியத்தொடங்கியுள்ளது. யுத்தத்தை எவ்வாறு முன்னெடுப்பது அல்லது எவ்வாறு இனவாதங்களைத் தூண்டிவிடுவது, அதிலிருந்து நாட்டை சமாதான சூழ்நிலையற்றதாகமாற்ற வெளிநாட்டு தீயசக்திகள் முன்னின்று செயற்பட்டுவருகின்றன.

அதற்கு இலங்கையரசு விலை போயுள்ளதாக புலனாய்வுச்செய்திகள் தெரிவிக்கின்றன. மாவிலாறில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் நிறைவடைந்த யுத்தத்தின் வடுக்கள் இன்னமும் தமிழ்மக்கள் மத்தியில் ஆறாத நிலையில் இருந்து வருகின்றது. தற்பொழுது சமாதான காலம், பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்டிவிட்டோம் எனக் கூறும் இலங்கையரசு தமது பாதுகாப்பு நிலையங்களை குறிப்பாக வடகிழக்கில் பலப்படுத்தி வருகின்றது. காரணம் அமெரிக்கரசால் மீண்டும் யுத்தமொன்றை இலங்கையில் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

அது மட்டுமல்லாது கிளர்ச்சிப்படைகள் என்ற போர்வையில் எவ்வாறு ஈராக்,சிரியா,லிபியா போன்ற நாடுகளில் இடம்பெற்றதோ அதேபோன்றதானதன்மையை உருவாக்கும் போர்வையில் நாடுகடந்த தமிழீழ அரசுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றது. இலங்கைப்புலனாய்வுத் தகவல்களின் படி தகவல் சேகரிப்புக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. 85 சதவீதமான தகவல்கள் பூகோள சம்பந்தப்பட்டவையாகவே அமைகின்றது.

உதாரணமாக இலங்கையில் ஒரு இராணுவ தரையிறக்கத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் கொமான்டிங் செய்வதற்கேற்ற வகையில் இத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது இலங்கையின் 65,610 சதுர கிலோமீற்றரும் அமெரிக்க CIAயினால் வரைபிடப்பட்டு, கடல், தரை மார்க்கங்கள் உள்வாங்கப்பட்டுள்ளது இவ்வாறான நிலையில் மற்றுமொரு யுத்தம் உருவாக்கப்படும் திட்டத்திலேயே அமெரிக்க நிறுவனங்களின் செயற்பாடுகள் இலங்கையில் அமையப்பெற்றுள்ளது எனலாம். வட, கிழக்கு, தென், மேல், மத்திய, ஊவா, சப்பிரகமுவ, வடமேற்கு, வடமத்திய போன்ற மாகாணங்களை உள்ளடக்கிய மக்கள் சனத்தொகை, அவர்களின் வாழ்வாதாரம் போன்ற விடயங்களும் இவர்களுடைய ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டை சதிப்புரட்சி செய்வதற்கும் அக்காலகட்டத்தில் இவ்வாறான தரவுகளே காரணமாக அமைந்திருக்கின்றன

. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை வேறுவிதமாக மாற்றியமைக்கும் செயற்திட்டமாக இச்செயற்பாடுகள் அமையப்பெறுகின்றது. யுத்தக்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்படவேண்டும் என ஐ.நா சபையினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் போர்க்குற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்காத அரசிற்கு எதிர்ப்புக்களை வழங்கும் முகமாக தமது திட்ட வியூகங்களை வகுத்துள்ளன.

அதே நேரம் உலக வல்லரசின் உதவி கொண்டு வருகின்ற பிரச்சினைகளை முறியடிக்கலாம் என இலங்கையரசு எண்ணியுள்ளது. குறிப்பாக சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவேயென்பதாகும். வெளித்தோற்றத்தில் சீனா, ரஷ்யா அமெரிக்காவிற்கு எதிரானவர்கள் எனக்காட்டிக்கொள்கிறார்களே தவிர, அவர்களுடைய நட்பு அல்லது அவர்களுடைய தொடர்பாடல்கள் நேர்த்தியாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வீட்டோ அதிகாரம் கொண்ட நாடாகத் திகழும் சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா இவற்றுள் முக்கியத்துவம் பெறுகின்றன. அமெரிக்கா தனது நிலைகளை பலப்படுத்திக்கொள்ளும் வகையில் இலங்கையரசின் கடற்பிராந்தியங்களை கையாளும் இலக்கில் உள்ளது. அவை அவர்கள் கையில் கிட்டும் வரை இலங்கைக்கெதிரான போர் முன்னெடுப்புக்கள் இரகசிய தாக்குதல் திட்டங்களை முன்னெடுக்கும். காலத்திற்குக்காலம் அரசியல் மாற்றங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவை நம்பி தமிழினம் மண்ணைக்கவ்வியது போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விற்கும் அதேநிலைமையேற்படும். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் பயன்படுத்தி வந்த விமானப்பாதைகள், கடற் பிராந்தியக்கோட்டைகள், விமானங்கள், பதுங்குகுழிகள் போன்றவற்றை இராணுவம் கைப்பற்றியது. அண்மையில் அமெரிக்கரசினால் இலங்கையில் அமைவிடங்கள் முக்கியமாக 05 மலைத்தொடர்கள் தொடர்புடைய வரைபடங்கள் அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் வைத்து ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றிற்கான பின்னணிக்காரணங்கள் நிறையவே இருக்கின்றன. இவ்வாறான செயற்திட்டங்களை அமெரிக்கா மட்டுமல்ல இந்தியரசும் மேற்கொண்டுவருகின்றது. அதிகமான அதிகாரம் அமெரிக்காவின் கையிலிருப்பதாலும், சுயாதீனமாக செயற்படுவதற்கு அவர்களுக்கு முடிகின்றது. இந்தியாவையும் இலங்கையையும் எடுத்துக்கொண்டால் இந்தியாவில் ஒரு மா நிலமே இலங்கையிலுள்ள சனத்தொகையாகக் காணப்படுகின்றது.

29 மாநிலங்களைக்கொண்ட இந்தியரசானது நூற்றி இருபத்தைந்து கோடி சனத்தொகையைக் தாண்டியுள்ள இந்நிலையிலும், 593 மாவட்டங்களை உள்ளடக்கியும், 7இலட்சம் கிராமங்களை உள்ளடக்கியும், 1652மொழிகளைக் கொண்டும், 4535 இனங்களைக் கொண்டும் காணப்படுகின்றது. தனி மாநிலங்களாக வடக்கு கிழக்கினைப் பிரித்து கூட்டமைப்பின் கையில் வழங்குவதற்கு இலங்கையரசு தயாராகவில்லை. அண்மையில் வட மாகாண சபை முதலமைச்சரின் கருத்தின்படி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தமக்கு அளித்த இரண்டு வாக்குறுதிகளில் அவையிரண்டும் நிறைவேற்றப்படவில்லை. அதில் ஒன்று வடமாகாண ஆளுநர் இராணுவத்தினர் அல்லாத ஒருவரை நியமிப்பதாக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு இதுவரை நடைபெறாது மீண்டும் அவரையே நியமிக்கும் நிலைமை தோன்றியுள்ளது. யுத்தத்தை முன்னெடுப்பதனூடாக இலங்கையில் என்றுமில்லாதவாறு நடைபெற்ற யுத்தமாகவே இனி ஒரு யுத்தம் அமையப்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதனை மாற்றியமைக்க அமெரிக்காவின் காலில் விழுவதை விட இலங்கையரசிற்கு வேறு வழியுமில்லை. இனி நடைபெறுகின்ற தாக்குதல்கள் ஒவ்வொன்றும் தொழில்நுட்ப ரீதியாகவே நடைபெறும்

**சுழியோடி**

02ஆம் பக்க தொடர்ச்சி...

ஆனால் எமது விடுதலைப் பாதையில் நாம் சற்றுத் துரிதமாக முன்னேற இது வழி சமைத்துள்ளது.நிட்சயமாக இது எமது எதிரியைப் பலவீனப்படுத்துவதோடுநாம் பலமடைய உதவும். எங்களுக்கு சுயநிர்ணயம் கிடைக்கவில்லை தனிநாடு கிடைக்கவில்லை அதைப்புறககணிப்போம் என்று கூறினால் அதைவிட மூடத்தனம் என்ன இருக்கமுடியும். தமிளருக்காகத்தான் நாங்கள் பிரேரணை கொண்டு வருகிறோம் என்றுஅமேரிக்காசொன்னார்களா?.அவர்கள் தமது தேவைக்காக கொண்டுவருகிறார்கள். அதை முடிந்தவரை எமக்குச் சாதகமாக வலிமையாக்கி நாம் பயன் பெற வேண்டுமே தவிர அதை எதிர்க்கவோ நிராகரிக்கவோ கூடாது. அதுவும் சும்மா வெளிப்படையாக சரி பிழைநீதி அநீதி என்பவற்றைக் கதைப்பதொடு நில்லாமல் அகப்புறராஜதந்திரச்செயற்பாடுகள் அவசியம். ராஜதந்திரச் செயற்பாடுகள் முழுவதும் பகிரங்கப் படுத்தக் கூடியதாக இருக்காது. என்ன காரணத்திற்காக அரசியற் தலைவர்கள் தனியான விமானங்களில் நெடும்தூரம் பயணம் பண்ணி மற்ற அரசியற் தலைவர்களைத் தனியாகச் சந்திக்கிறார்கள்.

இருந்த இடத்தில் இருந்து கொண்டே தொடர்புகொள்ள . பேச்சுவார்த்தை மேற்கொள்ள முடியாதா?. வெளியே தெரியாமல்தமதுராஜதந்திரச்செயற்பாடுகளில் ஈடுபடத் தான் அப்படிச் செய்கிறார்கள். இல்லை, இல்லை, அவையை நம்பேலாது எங்களுக்கும் விளங்கப்படுத்தித் தான் செய்ய வேண்டும் என்று கேட்பது பெரும் புத்திசாலித் தனமா?. உண்மையை விளங்கிக்கொள்ள முடியாத பொது மக்களைக் குழப்பி செயர்ப்பாட்டாளர்களை விமர்சிப்பதால் எம்மை நாமே பலவீனப் படுத்திக் கொள்கிறோம். இது தேவை தானா?. அமேரிக்கா தமிழருக்கு தீர்வு தரப் போகிறார்கள் என்று முதலில் இல்லாத தொன்றைக் கூறி மக்களைக் குழப்பி உசுப்பேற்றிவிட்டு பின்னர் அமேரிக்கா எங்கள் எதிரி இந்தியா துரோகி என்று ஏன் இவர்கள் மக்களை தவறாக வழி நடத்த வேண்டும்?. உதவியாய் இல்லாவிட்டாலும் உபத்திரம் இல்லாமல் ஆவது இருப்பது நல்லது.

தீர்மானத்தின் வெற்றிக்கு உழைத்தோர், தீர்மானத்தை வரவேற்றிருப்போர் யார் அதற்கான செயற்பாட்டில் நிட்சயமாக சனல்4 மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அத்திவாரமாக உள்ளன. பின்னர் அமெரிக்க அணியிலுள்ள நாடுகளைத் தான் முதலாவதாக குறிப்பிட வேண்டும். அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சொல்லலாம். தொடர்ந்து புலம்பெயர் தமிழரின் செயற்பாடு களும் நல்ல பயனைக் கொடுத்தன. தமிழ் நாட்டின் பலமும் கணிசமான தாக்கத்தைக் கொடுத்தது. தீர்மானத்தின் வெற்றிக்கு இவர்கள் அனைவரின் செயற்பாடுகளும் பாராட்டப் பட வேண்டியவைதான்.இதன் வெற்றிக்காக உழைத்த அனைத்து நாடுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் TGTE,CTC, BTF, GTF போன்ற இன்னும் பல அமைப்புகளும் இதை வரவேற்றிருக் கின்றார்கள்.

**தீர்மானத்தை எதிர்ப்போர் யார் யார் அவர்களின் தேவை நோக்கம் என்ன?.**

இலங்கையையும், இந்துசமுத்திரப் பிராந்தியத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பும் சீனாவும் சீனஅணிநாடுகளும் இதை எதிர்க்கிறார்கள். அது விளங்கிக்கொள்ளக் கூடியது தானே. தனது தனிச்சிங்களப் பவுத்த நாட்டு உருவாக்கத்திற்கு எதிரானதால் இலங்கை எதிர்க்கிறது. அதுவும் யதார்த்த மானது. சர்வதேச விசாரணையால் இலங்கையோடு சேர்ந்து தானும் அகப்பட வேண்டி வரும் என்பதால் இந்தியா ஆதரிக்கவில்லை.

அதுகூட விளங்கிக்கொள்ளக் கூடியது தான். ஆனால் ஒரு தமிழ்க் குழுவினர் இதை ஏன் எதிர்க்கிறார்கள்?. அதுதான் பலருக்கும் விளங்கிக் கொள்ள முடியாத புதிராக உள்ளது. தமிழருக்குச் சாதகமான ஒன்று தம்மால் சாதிக்கப்படாமல் வேறு யாரோ அதற்குக் காரண மாகிறார்கள் என்ற பொறாமையா, அல்லது எதையாவது கூறி குழப்புவதன் மூலம் தம்மை முன்னிலைப் படுத்தலாம் என்பதாலா?. அதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

**அடுத்து என்ன நடக்கலாம்?. ஈழத்தமிழரின் செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும்?.**

ஜெனீவாக் களத்தால் மட்டும் தமிழர் வெற்றி பெற முடியாது. ஏதோ ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டினால் மட்டும் அதைப் பெற முடியாது. பல்வேறு தளங்களில் பல்வேறு செயற்பாடுகளில் நாம் ஈடுபடவேண்டும். வருகின்ற சர்வதேச விசாரணைக்கு தேவையான சாட்சியங்களை முன்னிலைப் படுத்த வேண்டும்.உள்நாட்டில் விசாரணை நடைபெறாவிட்டாலும் புலம் பெயர் தமிழரின் சாட்சியங்களை முறையாக முன்னிலைப் படுத்தலாம். ஐக்கிய நாடுகள் சபையில் நமக்கான ஒரு பாதுகாப்புப் பொறிமுறையைக் கொண்டுவரும் அழுத்தங்களை செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

தொடர்ந்து நமக்குப் பலம் சேர்க்கும் விடயங்களையும் எதிரியைப் பலவீனப் படுத்தும் விடயங்களையும் செய்தால் வெற்றி நிட்சயம். அனைத்துத் தமிழர் தரப்பும் தாம் தாம் செய்யக்கூடியதை செய்துகொண்டு அதை மட்டும் மக்களுக்கு தெரிவிப்ப தோடு நிற்க வேண்டுமே தவிர இன்னொரு அமைப்பு செய்யும் செயற்பாடுகளை விமர்சிப்பதால் எம்மை நாமே பலவீனப் படுத்தக் கூடாது. மக்களுக்கு நன்மை செய்யாத அமைப்புகளை மக்களே இனம்கண்டு தவிர்த்துக் கொள்வார்கள். அதை இன்னொரு அமைப்புச் செய்யவேண்டியதில்லை. ஒற்றுமைதான் வெற்றியின் அத்திவாரம். எந்த நாட்டையும் நிரந்தர எதிரியாகவோ நிரந்தர நண்பனாகவோ பாராமல் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சாதுரியமாய் சாணக்கியமாய் செயற்படுவோம். வெற்றி நமதே







## இன்று பூமியை மிக நெருக்கமாக கடக்கும் பிரமாண்ட சிறுகோள்! பூமிக்கு ஆபத்தா?

இந்த ஆண்டின் மிகப்பெரிய சிறுகோள் இன்று இரவு பூமியைக் கடக்க உள்ளது. 2021-ஆம் ஆண்டின் மிகப் பெரிய சிறுகோளான இது, இந்திய நேரப்படி மார்ச் 21-ஆம் திகதி இரவு 9:00 மணிக்கு பூமியை கடக்கிறது. 2001 குழு32 என அழைக்கப்படும் இந்த விண்வெளி பாறை கிட்டத்தட்ட அரை கிலோமீட்டர் அகலமானது. இது உலகின் மிக உயரமான சிலையான 'ஒற்றுமை சிலையை விட இரு மடங்கு பெரியதாகும். சுமார் 440 மீட்டர் முதல் 680 மீட்டர் வரை அகலம் கொண்டது. இது ஒரு மணி நேரத்திற்கு 123,876 கிலோமீட்டர் வேகத்தில், ஒரு சராசரி சிறுகோளை விட வேகமாக பறக்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

மேலும், 2001 குழு32 சிறுகோள் பூமியிலிருந்து 2 மில்லியன் கிலோமீட்டர் தூரத்தில் பயணிப்பதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். NASA வின் கருத்துப்படி, இந்த சிறுகோள் நமது கிரகத்திற்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது. ஆயினும்கூட, இது நாசாவின் சிறுகோள் கண்காணிப்பு பட்டியலில் வைக்க போதுமானதாக உள்ளது மற்றும் ஒரு 'அபாயகரமான சிறுகோள்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பெரிய சிறுகோள், பெரிய அச்சுறுத்தல் தான். பூமியின் ஈர்ப்பு விசையால் இழுக்கப்படும் அளவுக்கு அது நெருங்காத வரை நிம்மதி பெருமூச்சு விடலாம்.

2013 ஆம் ஆண்டில், 17 மீட்டர் அகலம் மட்டுமே இருந்த செல்லியாபின்ஸ்க் விண்கல் ரஷ்யாவின் மேற்பரப்பில் 30 கிலோமீட்டர் தொலைவில் நெருங்கும்போது வெடித்தது. அதன் விளைவாக ரஷ்யாவின் செல்லியாபின்ஸ்கில் ஜன்னல் மற்றும் கதவுகள் சிதறின, அது 40 ஹிரோஷிமா குண்டுகளின் சக்தியுடன் வெடித்ததாக கூறப்படுகிறது. நேரடி தாக்கம் இல்லை என்றாலும், இதன் விளைவாக 444,000 டன் TNT வெடித்ததற்கு சமமாக 500 சதுர கிலோமீட்டர் சுற்றளவில் கட்டிடங்களை உடைக்க போதுமானதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.




## காகிதமா, தொடுதிரையா?

டேப்லெட் எனப்படும் பலகைக் கணினிகள் வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவற்றில் எழுதுவதற்காக உருவாக்கப்பட்ட 'ஸ்டைலஸ்' எனப்படும் மின்னணு பேனா இப்போது பிரபலமாகியுள்ளன. சரி, ஸ்டைலர் மூலம் பலகைக் கணினியில் எழுதும்போதும், சாதாரண பேனாவால், காகிதத்தில் எழுதும் போதும் மூளையில் என்ன நிகழ்கிறது?



அண்மையில், 'பிரான்டியஸ் இன் பிஹேவியரல் நியூரோசயன்ஸ்', இதழில் இது குறித்த ஆய்வு வெளிவந்துள்ளது. அதன்படி, பலகைக் கணினி திரை மீது, ஸ்டைலசைப் பிடித்து எழுதுவதைவிட, பேனாவால் காகிதத்தில் எழுதுகையில், மூளையின் செயல்பாடு அதிகரிப்பதோடு, எழுதிய தகவல்கள் நன்கு நினைவில் பதிகின்றன.

பலகைக் கணினி திரையில், எழுதிய தகவல்களை மேலும் கீழுமாக தள்ளிவிட முடியும். ஆனால், காகிதத்தில் அப்படி செய்ய முடியாது. பக்க அளவு, அதில் நாம் எழுதிய இடம், வரைந்த படம் போன்றவை அப்படியே நம் மனதில் படமாக நினைவில் வைக்க முடியும்.இதுபோன்ற காரணிகளால் பேனாவும், காகிதமும் இன்னும் முதலிடத்தை வகிக்கின்றன.

## சுமார் 130 கோடி போலி அக்கவுண்ட்களை அதிரடியாக நீக்கியது பேஸ்புக் நிறுவனம்!

பேஸ்புக் நிறுவனம் தனது தளத்தில் இருந்து சுமார் 130 கோடி போலி அக்கவுண்ட்களை நீக்கி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவை கடந்த ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் நீக்கப்பட்டதாக பேஸ்புக் தெரிவித்தது.

இது மட்டுமின்றி கொரோனாவைரஸ் பாதிப்பு குறித்து பரவிய 1.2 கோடி போலி தகவல்கள் அடங்கிய பதிவுகள் நீக்கப்பட்டதாகவும் பேஸ்புக் தெரிவித்து இருக்கிறது.

மேலும் பேஸ்புக் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்கள் போலி செய்தி பரவலை எவ்வாறு கையாள்கின்றன என்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் விரைவில் விளக்கமளிக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




## வட்ஸ்அப் பயனர்களுக்கு ஓர் மகிழ்ச்சி தகவல்! வருகிறது புதிய அம்சம்

வட்ஸ்அப் நிறுவனம் தனது பயனர்களுக்கு ஆடியோ மெசேஜை FAST FORWARD செய்ய புதிய வசதியை கொண்டுவர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது நீண்ட ஆடியோ மெசேஜ்களை கேட்பதை எளிதாக்கும் புதிய அம்சத்தை தான் இந்நிறுவனம் கொண்டுவர உள்ளது. எவ்வாறு ஏனெனில் ஒரு வட்ஸ்அப் ஆடியோ மெசேஜை 1.5எக்ஸ் அல்லது 2எக்ஸ் வேகத்தில் பிளே செய்து இயக்க முடியும். மேலும் வாடிக்கையாளர்கள் ஸ்டாண்டர்ட் 1 எக்ஸ் வேகத்திலும் ஆடியோ மெசேஜ்களை கேட்டகாலம் என்று கூறப்பட்டுள்ளது.

அதிலும் உங்களது நண்பர்கள் அல்லது உறவினர்கள் மிகவும் மெதுவாகப் பேசும் வட்ஸ்அப் வாய்ஸ் மெசேஜை உங்களுக்கு அனுப்பினால், அந்த மெசேஜை நீங்கள் விரைவாகப் புரிந்துகொள்ள இந்த FAST FORWARD அம்சம் அருமையாக உதவும். ஆனால் இந்த புதிய வசதி தற்போது பீட்டாவில் இருப்பதாகவும், வட்ஸ்அப் வெர்ஷன் 2.21.60.11 இந்த அம்சத்துடன் வரும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**அறிவியலே எதிர்காலத்தின் சாவி. அறிவியலை நம்பாதவர்கள், மற்ற எல்லோரையும் முன்னேறவிடாமல் பூட்டி வைக்கிறார்கள்.**

**வில்லியம் சான்போர்டு நை,**
**அமெரிக்க அறிவியல் ஊடகவியலாளர்**






## சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா தொற்று உறுதி

மாஸ்டர் பிளாஸ்டர் என அழைக்கப்படும் புகழ்பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

லேசான அறிகுறிகளை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மருத்துவர்களின் அறிவுறையின்படி வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சச்சின் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை சச்சின் டெண்டுல்கரின் குடும்ப உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.



## இந்தியாவை சொந்த மண்ணிலேயே பந்தாடியது இங்கிலாந்து!

இந்தியா அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்யதுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், 1-1 என்ற கணக்கில் சமநிலைப் பெற்றுள்ளது. புனே மைதானத்தில் அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 336 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கே.எல்.ராகுல் 108 ஓட்டங்களையும் ரிஷப் பந்த் 77 ஓட்டங்களையும் விராட் கோஹ்லி 66 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், அறிமுக வீரர் டொப்லே மற்றும் டொம் கர்ரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சேம் கர்ரன் மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 337 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 43.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜோனி பேயர்ஸ்டொவ் 124 ஓட்டங்களையும் பென் ஸ்டோக்ஸ் 99 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இந்திய அணியின் பந்துவீச்சில், பிரசீத் கிருஸ்ணா 2 விக்கெட்டுகளையும் புவனேஸ்வர் குமார் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 112 பந்துகளில் 7 சிக்ஸர்கள் 11 பவுண்ரிகள் அடங்களாக 124 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜோனி பேயர்ஸ்டொவ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான தொடரின் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது போட்டி, நாளை புனே மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## இறுதிநாள் போட்டியிலும் வெற்றிபெற்று பங்களாதேஷை வயிட் வோஷ் செய்தது நியூஸிலாந்து!

பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, 164 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ள நியூஸிலாந்து அணி, பங்களாதேஸ் அணி வயிட் வோஷ் செய்துள்ளது. வெலிங்டனில் அன்று (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 318 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கோன்வே 126 ஓட்டங்களையும் டேரில் மிட்செல் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், ருபெல் 3 விக்கெட்டுகளையும் முஷ்டபிசுர், டஸ்கின் அஹமட் மற்றும் சௌமியா சர்கர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 319 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 42.4 ஓவர்கள் நிறைவில் 154 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் நியூஸிலாந்து அணி 164 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமதுல்லா ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களையும் லிடொன் தாஸ் மற்றும் முஷ்பிகுர் ரஹ்மான் ஆகியோர் தலா 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் டேவோன் கோன்வே தெரிவுசெய்யப்பட்டார். அடுத்ததாக இரு அணிகளுக்கிடையிலான, மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இத்தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி ஹமில்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## இங்கிலாந்து ஒருநாள் போட்டிகளையும், ஐ.பி.எல் போட்டிகளையும் தவறவிடும் ஸ்ரேயாஸ் ஐயர்



இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் தோள்பட்டை காயம் அடைந்த இந்திய அணிவீரர் ஸ்ரேயாஸ் ஐயர், மீதமுள்ள இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புனேவில் இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் எட்டாவது ஓவரின்போது களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த ஸ்ரேயாஸ் ஐயருக்கு இடது தோளில் காயம் ஏற்பட்டது.

அவருக்கு அறுவை சிகிச்சை அவசியமா என்ற தகவல்கள் இதுவரை வெளியாகாத நிலையில் குறித்த காயத்தில் இருந்து ஐ.பி.எல். தொடருக்கு முன்னர் அவர் குணமடைவது கடினம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்துடனான தொடரைத் தவிர்த்து, ஐ.பி.எல். தொடரில் டெல்லி கப்பிடல்ஸ் அணியின் தலைவராக இருக்கும் ஸ்ரேயாஸ் ஐயர், குறித்த தொடரின் ஒருசில போட்டிகளை தவறவிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக செய்திகள்

## பிரித்தானியாவின் விசேட கடவுச் சீட்டை ஏற்க வேண்டாமென சில நாடுகளிடம் ஹொங்கொங் கோரிக்கை!

பிரித்தானியாவின் விசேட கடவுச் சீட்டுக்களை ஏற்க வேண்டாம் என ஹொங்கொங் அரசாங்கம் சில வெளிநாட்டு அரசாங்கங்களைக் கேட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளில் வேலை செய்யும் குடிமக்களின் விடுமுறை விசாக்களுக்கு விண்ணப்பிக்கப் பயன்படுத்தும் பிரித்தானிய தேசிய வெளிநாட்டு கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்வதை நிறுத்துமாறு 14 நாடுகளிடம் கூறியுள்ளது. அதில், கடந்த ஜனவரி 31ஆம் திகதியில் இருந்து பிரித்தானிய தேசிய வெளிநாட்டு கடவுச்சீட்டை செல்லுபடியாகும் பயண ஆவணமாகக் கருதவில்லை எனவும், இதற்குப் பதிலாக ஹொங்கொங் கடவுச்சீட்டைப் பயன்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.



இந்நிலையில், குறித்த கடிதத்தைப் பார்த்த மூத்த மேற்கத்தேய தூதுவர் ஒருவர், பெரும்பாலான நாடுகள் ஹொங்கொங்கின் இந்தக் கோரிக்கையை புறக்கணிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், எந்தவொரு நாட்டுக்கும் எந்த வெளிநாட்டுக் கடவுச்சீட்டை அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்ல ஹொங்கொங்கிற்கு உரிமையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் ஆட்சியின் கீழுள்ள ஹொங்கொங்கை விட்டு வெளியேற விரும்பும் ஹொங்கொங் குடியிருப்பாளர்களுக்கு முழுக் குடியுரிமைக்கான அனுமதியை வழங்கும் வகையில் புதிய விசா திட்டத்தை பிரித்தானியா அறிமுகப்படுத்தியது. ஹொங்கொங்கில் சீனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பிரித்தானியா தேசிய வெளிநாட்டு கடவுச்சீட்டை வைத்திருப்பவர்களுக்கு குடியுரிமையை வழங்கும் வகையில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1997ஆம் ஆண்டில் பிரித்தானியா ஹொங்கொங் நகரத்தை சீன ஆட்சியாளர்களிடம் ஒப்படைப்பதற்கு முன்னதாக உருவாக்கப்பட்ட தேசிய வெளிநாட்டு கடவுச்சீட்டு ஆவணத்தை ஏறக்குறைய மூன்று மில்லியன் ஹொங்கொங் குடியிருப்பாளர்கள் வைத்திருக்கிறார்கள். இந்நிலையில், சீனாவின் பின்புலத்தில் ஹொங்கொங் அரசாங்கம் பிரித்தானியாவின் தேசிய வெளிநாட்டு கடவுச்சீட்டை முடக்கும் நடவடிக்கையைக் கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மியன்மார் போராட்டம்: பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த 628பேர் விடுவிப்பு!

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு, பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த 628பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். யாங்கூன் நகரின் இன்செயின் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர்கள், பேருந்து மூலம் அழைத்துச் செல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. விடுவிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் எனவும் போராட்டத்தின் சின்னமான மூவிரல் வணக்கம் செலுத்தியவாறு அவர்கள் உற்சாகத்துடன் சிறையிலிருந்து வெளியே வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




இதற்கிடையே, இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட 2,812 பேருக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மியன்மார் அரசியல் கைதிகள் நலச் சங்கம் தெரிவித்துள்ளது. அவர்களில் 2,418பேர் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஜனநாயக அரசாங்கத்தை மீண்டும் அமைக்க வலியுறுத்தியும் கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்களை விடுவிக்கக் கோரியும் மியன்மார் முழுவதும் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இதுவரை 275 பேர் உயிரிழந்ததாக மியன்மார் அரசியல் கைதிகள் நலச் சங்கம் தெரிவித்துள்ளது.

## வடகொரியாவின் ஏவுகணை சோதனை: பேச்சுவார்த்தைக்கு பாதிப்பில்லை என்கிறது அமெரிக்கா!

வடகொரியாவின் அண்மைய ஏவுகணை சோதனை, அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. வடகொரியா கடந்த வார இறுதியில், குறுகிய தூர ஏவுகணை சோதனை நடத்தியதாக, வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.



வடகொரிய தலைவரின் சகோதரி கிம் யோ ஜாங், அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்த சில நாட்களிலேயே இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், இது குறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறுகையில், 'புதிய நிர்வாகம், பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சலுகைகளை வடகொரியா புறக்கணித்து உள்ளதால் ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது. எனினும், இந்த ஏவுகணை சோதனை, பேச்சுவார்த்தையில் கதவுகளை மூடுவதாக ஜோ பைடன் நிர்வாகம் கருதவில்லை' என கூறினர்.

## எகிப்தில் இரண்டு ரயில்கள் மோதி கோர விபத்து: 32 பேர் உயிரிழப்பு!

மத்திய எகிப்தில் இரண்டு பயணிகள் ரயில்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் குறைந்தது 32 பேர் உயிரிழந்துள்ளதாக எகிப்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும் 66 பேர் காயமடைந்துள்ளதுடன் மீட்புப் பணிகள் இடம்பெற்றுவருவதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் மூன்று கார்களும் சிக்கிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோஹாக் மாகாணத்தின் தஹ்தா மாவட்டத்தில் தலைநகர் கெய்ரோவிலிருந்து தெற்கே 460 கிலோமீற்றர் (285 மைல்) தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிக வேகத்தில் செல்லும்போதே ரயில்கள் மோதியுள்ள நிலையில், இரண்டு ரயில் பெட்டிகள் கடும் சேதமடைந்தும் மூன்றில் ஒரு பகுதி ரயில் பெட்டிகள் தடம்புரண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பிலிப்பைன்ஸில் கொவிட்-19 தொற்றினால் ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

பிலிப்பைன்ஸில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற்றினால், மொத்தமாக ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் படி, பிலிப்பைன்ஸில் ஏழு இலட்சத்து இரண்டாயிரத்து 856பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 30ஆவது நாடாக விளங்கும் பிலிப்பைன்ஸில், இதுவரை 13ஆயிரத்து 149பேர் உயிரிழந்துள்ளனர்.



கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், ஒன்பதாயிரத்து 838பேர் பாதிக்கப்பட்டதோடு 54பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால், ஒரு இலட்சத்து ஒன்பதாயிரத்து 18பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 785பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து ஐந்து இலட்சத்து 80ஆயிரத்து 689பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

## கொவிட்-19 - கனடாவில் ஒன்பது இலட்சத்து 50ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

கனடாவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றினால், கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் ஐந்தாயிரத்து 93பேர் பாதிக்கப்பட்டதோடு 36பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 23ஆவது நாடாக விளங்கும் கனடாவில், இதுவரை மொத்தமாக வைரஸ் பெருந்தொற்றினால், ஒன்பது இலட்சத்து 56ஆயிரத்து 655பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 22ஆயிரத்து 826பேர் உயிரிழந்துள்ளனர்.



மேலும், 40ஆயிரத்து 360பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 661பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இதுவரை எட்டு இலட்சத்து 93ஆயிரத்து 469பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

# விதை அளவே உடல் உலகின் மிகச் சிறிய ஊர்வன இன விலங்கு கண்டுபிடிப்பு!



உலகிலேயே மிகச் சிறிய ஊர்ந்து செல்லும் உயிரினத்தை தாங்கள் கண்டுபிடித்திருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். பச்சோந்தி இனத்தின் உள்ளினத்தை சேர்ந்த அந்த உயிரினம் ஒரு விதையின் அளவுக்குத் தான் இருக்கிறது.

அப்படிப்பட்ட இரண்டு பல்லிகளை ஜெர்மனி மற்றும் மடகாஸ்கரைச் சேர்ந்த விஞ்ஞானிகளைக் கொண்ட ஆய்வுக் குழு ஒன்று மடகாஸ்கரில் கண்டுபிடித்துள்ளது.

ஆண் ப்ரூகேசியா நானா அல்லது நானோ பச்சோந்தி என்று அழைக்கப்படும் அவற்றின் உடலின் நீளம் வெறும் 13.5 மில்லி மீட்டர் தான் இருக்கிறது.

எனவே, ஜேர்மனியின் முனிச் நகரத்தில் இருக்கும், 'பவாரியன் ஸ்டேட் கலெக்ஷன் ஆஃப் சுவாலஜி' என்கிற அமைப்பின் படி, 11,500 ஊர்ந்து செல்லும் உயிரினத்தில், இந்த நானோ பச்சோந்தி மிகவும் சிறிய உயிரினம் என்கிற இடத்தைப் பிடிக்கிறது என்கிறது இதை கண்டறிந்த ஆய்வுக்குழு.தலை முதல் கால் வரையில் இவற்றின் மொத்த நீளமே 22 மில்லி மீட்டர்தான். பெண் பச்சோந்தி இதை விட கூடுதல் நீளம் கொண்டதாக, 29 மில்லிமீட்டர் நீளத்தோடு இருக்கிறது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

"இந்த நானோ பச்சோந்திகளின் வாழ்விடம் காடழிப்புக்கு இலாக்காகி இருந்தது. ஆனால் சமீபத்தில் இந்த உயிரினம் வாழும் பகுதி பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக சேர்க்கப்பட்டதால், இனி இவை அங்கு தொடர்ந்து வாழும்" என ஹாம்பெர்க்கில் உள்ள 'சென்டர் ஆஃப் நேச்சுரல் ஹிஸ்டரி' என்கிற அமைப்பைச் சேர்ந்த ஆலிவர் ஹாலிட்ஸ்செக் என்கிற விஞ்ஞானி கூறியுள்ளார்.

இந்த பச்சோந்தி, மழைக்காடுகளின் தரையில் மைட்ஸ் எனப்படும் சிறிய பூச்சிகளை வேட்டையாடுகிறது. எதிரிகளால் வேட்டையாடப்படாமல் இருக்க, புற்களுக்கு மத்தியில் மறைந்து கொள்கிறது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

"இந்த ப்ரூகேசியா உயிரினம் வாழும் வனப் பகுதி, அத்தீவின் வடக்குப் பகுதி முழுக்க மற்ற வனப் பகுதிகளோடு நன்றாகவே இணைந்திருக்கிறது" என்கிறார் இந்த உயிரினம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட மற்றொரு விஞ்ஞானியான மார்க் செர்ஸ்.
"இந்த புதிய சிறிய நானோ பச்சோந்தி, தீவில் இருக்கும் மிகச் சிறிய உயிரினங்களுக்கான வடிவங்களை மீறி இருக்கிறது. வேறு ஏதோ விஷயம் தான் இந்த நானோ பச்சோந்தியை இத்தனை சிறியதாக இருக்க அனுமதிக்கிறது" என்றார் மார்க்.

பச்சோந்திகள் விரைவில் அழியக் கூடிய உயிரினங்களில் ஒன்றாக இருக்கிறது என 'இன்டர்நேஷ்னல் யூனியன் ஃபார் கன்சர்வேஷன் ஆஃப் நேச்சர்ஸ்'-ல் பட்டியலிடப்பட வேண்டும், அதையும் அதன் வாழ்விடங்களையும் பாதுகாக்க வேண்டும் என விஞ்ஞானிகள் தங்கள் அறிக்கைகளில் கூறியுள்ளனர்.

# புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

மருதமுனை ஹெப்பி கிட்ஸ் புலவர்மணி பாலர் பாடசாலையில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு ஞாயிறு பாடசாலை வளாகத்தில் அதன் தலைமை ஆசிரியை ஆயிஸா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்முனை மாநகரசபை உறுப்பினர் பீ.எம். சிபான், கமுஃ புலவர் மணி சரிபுத்தீன் வித்தியாலய அதிபர் எம்.முகமட் நியாஸ் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களை மாலை அணிவித்து வரவேற்றார்கள். நிகழ்வில் பாலர்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம்





இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 28.03.2021 அன்று வெளியிடப்பட்டது.